தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 471 பிலவ வருடம், மாசி மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை (05.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 01, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

ஐரோப்பாவின் மிகப்பெரிய அணு உலை மீது ரஷ்யா தாக்குதல்

12 பக்கம்

அமைச்சுகளில் நேற்றும் புதிய மாற்றங்கள்

புதிய போக்குவரத்து அமைச்சராக திலும்

03 பக்கம்

பெசிலை விளாசிய விமல்!

(படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

• யோ.தர்மராஜ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று (04) ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தனர். நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவின் தவறான தீர்மானங்களே நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார தாக்கத்துக்குக் காரணமென அவர்கள் குற்றஞ்சுமத்தினர். மேலும், பெரளவிலேயே கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவிவகிப்பதாகவும் நாட்டை பெசில் ராஜபக்ஷவே இயக்குவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

"நீதி கிடைக்கும்வரை அமைச்சுப் பணிகளை மேற்கொள்ள மாட்டேன்"

- அமைச்சர் வாசு

• யோ.தர்மராஜ்

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகிய இருவருக்கும் இழைத்த அநீதிக்கு நீதி கிடைக்கும்வரை நான் அமைச்சுப் பணிகளை மேற்கொள்ளப்போவதில்லை. அமைச்சரவைக்கும் செல்லவும் மாட்டேன் என அமைச்சர் வாசுதேவ...

02 பக்கம்

ஓர் அவலட்சண அமெரிக்கரான பெசிலே நாட்டை ஆள்கிறார்

- விமல் எம்.பி.

• யோ.தர்மராஜ்

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பெசில் ராஜபக்ஷவே முழு பொறுப்பு. அவலட்சணமான அமெரிக்கரான அவரே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றார். தன்னுடைய சகோதரர் அமைச்சரவைக்கு வருகை தராதிருப்பதை தடுப்பதற்காக எங்கள் இருவரையும் அமைச்சு...

02 பக்கம்

அமெரிக்காவிடமிருந்து நாட்டை மீட்பதற்கான போராட்டம் ஆரம்பம்

- கம்மன்பில எம்.பி.

• யோ.தர்மராஜ்

பொருளாதாரம் தொடர்பாக எவ்வித அனுபவமுமில்லாத ஒருவரினால் நாட்டின் பொருளாதாரம் கையாளப்படுவதால் நாடு பாரிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இதற்கு யார் காரணம் என்பதை இதுவரை சுதந்திரமாக வெளியிட முடியாதிருந்தோம்.

02 பக்கம்

முன்னுரிமை அடிப்படையில் டீசல் விநியோகம்

நாட்டில் டீசல் விநியோகம் குறித்த முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கை போக்குவரத்து சபை, புகையிரதம், மின்சாரம் மற்றும் வர்த்தக வலயங்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை இலங்கை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்ட மூன்றரை முதல் நான்கு மில்லியன் லீற்றர் வரையிலான தொகையை இரட்டிப்பாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 8 ஆயிரம் தொன் டீசல் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட உள்ளது.

02 பக்கம்

விமல், உதய ஆகியோருடன் ஒருபோதும் கூட்டணி கிடையாது

மனோவிடம் சஜித் தெரிவிப்பு

அரசிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோருடன் நாம் ஒருபோதும் கூட்டணி அமைக்கமாட்டோம். தேர்தலுக்கு முன்னும் சரி, பின்னும் சரி இத்தகைய இனவாதிகளை எம்முடன் சேர்க்க மாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச எம்.பி. நேற்று (04) தம்மிடம் உறுதியாக தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களிடம் கூறினார்.

02 பக்கம்

கமெண்ட் கந்தர்..



விமல் சொல்லுறத பார்த்தால் அவரை பதவியிலிருந்து தூக்கினத்துக்கு அமெரிக்க சதி தான் காரணமோ...

எரிபொருள் - மின் கட்டணங்களை அதிகரிக்குக!

மத்திய வங்கி பரிந்துரை

• யோ.தர்மராஜ்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நிலைமை காரணமாக எரிபொருள் விலை மற்றும் மின்சார...

02 பக்கம்

பணம் அச்சிடுவதை உடனடியாக நிறுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்து

• யோ.தர்மராஜ்

இலங்கையினால் இனியும் கடன் சுமையை சுமக்க முடியாது. எனவே, பணம் அச்சிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. நாட்டில் பணஸ்திரமின்மையைத் தடுக்க வட்டி விகிதங்கள் மற்றும் வரிகளை உடனடியாக உயர்த்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

02 பக்கம்

ஆடிய ஆட்டமென்ன... பேசிய வார்த்தையென்ன...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது எம்.பிக்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அளவலாவுகின்றனர். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

அரசின் பங்காளிகளாக இருந்துகொண்டு ஆளுந்தரப்பையே விமர்சிப்பது துரோகம்

டொலர் பிரச்சினைக்கு பெசில் காரணமல்லவென அமைச்சர் சந்திரசேன தெரிவிப்பு

•நா.தினுஷா

அரசின் பங்காளிகளாக ஆளுந்தரப்பில் இருந்துகொண்டே அரசாங்கத்தை விமர்சிப்பது துரோகமாகுமென கானி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு....

02 பக்கம்

நாட்டைக் காட்டிக்கொடுக்கும் முயற்சிகளில் விமல், கம்மன்பில

அதனாலேயே பதவி விலக்கப்பட்டதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

• யோ.தர்மராஜ்

எரிபொருள் நெருக்கடியை சமாளிப்பதற்கு முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில உரிய திட்டங்களை முன்னெடுக்கவில்லை. அதேபோன்று, வரலாற்றில் எந்த கைத்தொழில் அமைச்சருக்கும் வழங்காத நிதியை விமல் வீரவங்சவிற்கு வழங்கிய போதிலும் கைத்தொழில்துறையை மேம்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்காது எதிர்க்கட்சியின் நோக்கத்தை நிறைவேற்றி, எதிர்காலத்தில் பதவிகளுக்கு வருவதற்காக நாட்டை காட்டிக் கொடுக்கும் செயற்பாடுகளை அவர்கள் முன்னெடுத்ததாக...

02 பக்கம்

உஷ்

விமல் அணி பதவி விலக்கப்பட்ட பின்னர் உயர்மட்ட அரச தலைவர் ஒருவர் மைத்ரியை தொடர்புகொண்டு சந்திக்க வேண்டுமென கேட்டுக்கொண்டாராம்.

அரசியல் சந்திப்பல்லவா? கட்சியுடன் பேசிவிட்டு சொல்கிறேன் என கூறி அழைப்பினை துண்டித்தாராம் மைத்ரி.

சுதந்திரக் கட்சி எந்நேரத்திலும் அரசிலிருந்து விலகலாம் என்று தகவல்.

யுகதனவி ஒப்பந்த வழக்கு நிராகரிப்பு

•நா.தினுஷா

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் அரசுக்கு உரித்தான 40 சதவீதத்தை, அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்க அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட....

02 பக்கம்

பணம் அச்சிடுவதை...

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையினால் இந்த வருட ஆரம்பத்தில் இலங்கை தொடர்பாக முன்னெடுத்திருந்த மீளாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எதிர்காலப் பொருளாதாரம் சிறப்பானதாக அமையாது என்பதோடு, நாட்டின் கடன் சுமையை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடு எதிர்ப்பார்க்காதளவில் நாட்டில் அதிகரித்திருக்கும் அரச கடன், குறைந்த வெளிநாட்டு கையிருப்பு மற்றும் எதிர்வரும் வருடங்களில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிதித் தேவைகள் உள்ளிட்ட சவால்களை நாடு எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்க நம்பகமான மூலோபாயத்தை செயல்படுத்துவதற்கான தேவையுள்ளதுடன், பாதிக்கப்படக்கூடிய தரப்பினரை பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் முன்னெடுக்கும் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைள் மூலம் வறுமையை குறைக்க வேண்டும்.

2019ஆம் ஆண்டில் நாட்டின் வரிகளைக் குறைத்து 'உற்பத்திப் பொருளாதாரத்தை' உருவாக்குவதற்காக, நிதி அச்சடிப்பில் ஈடுபட்டமையே நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு காரணமாகும்.

2021ஆம் ஆண்டில் இலங்கை 1.2 டிரில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது. இதனால், பணவீக்கம் அதிகரிக்க ஆரம்பித்தது. 2019ஆம் ஆண்டு, ஏப்ரல் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் மற்றும் வரிக் குறைப்புக்கள் உள்ளிட்ட முக்கிய கொள்கை மாற்றங்களால் நாடு கடுமையாக பாதிக்கப்பட்டது.

இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குதல், பொதுவாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு சூழலை வலுப்படுத்தல், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை தொலைநோக்கு பார்வையுடன் நிர்வகித்தல் மற்றும் ஊழலை எதிர்ப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகளை முன்னெடுத்தல் போன்ற நடவடிக்கைகள் தற்போதைய நெருக்கடியை சமாளிக்க வழி வகுக்கும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டைக் காட்டிக்கொடுக்கும்...

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று (04) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொர்ந்து உரையாற்றுகையில், அரசாங்கத்தில் இருந்துகொண்டு எதிர்க்கட்சியின் பணிகளை முன்னெடுத்த வலுக்கிழ் அமைச்சரே ஊங்கள் அரசில் இருந்தார். அமைச்சிலிருந்து வெளியேறும்போது, 04 நாட்களுக்கே எரிபொருள் இருக்கின்றது. இன்று எரிபொருள் தீர்ந்துவிட்டது. ஆப்பில், திராட்சை கொண்டுவருகின்றனர். ஆனால், டொலர் வழங்குவதில்லை என்றெல்லாம் கூறினர். இவ்வாறு ஆச்சரியப்படவைக்கும் அமைச்சர்களே எங்களுடன் இருக்கின்றனர்.

நான்கு நாட்களுக்கே எரிபொருள் இருப்பதாக அமைச்சர் ஒருவர் கூறினால் மக்கள் அச்சமடையமாட்டார்களா, சில அமைச்சர்கள் கூட அச்சமடைந்து தங்களுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொண்டதாகக் கூறுகின்றனர். மேலும், 500 ரூபாவுக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டவர்கள், இன்று முழு தாங்கிக்கும் நிரம்பிக்கொண்டால் ஏனைய மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அமைச்சரின் அறிவிப்புகளால் பொதுமக்களே அதிகம் பாதிக்கப்பட்டனர்.

எனினும், எரிபொருள் தட்டுப்பாட்டை தடுப்பதற்கு எவ்வித திட்டங்களையும் முன்னெடுத்திருக்கவில்லை. இதனால், சுத்திகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டன. ஆனால், அரசாங்கத்தில் இருப்பதாகக் காட்டிக்கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதற்காக அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர்.

அதேபோன்று, இலங்கை வரலாற்றில் எந்தவொரு கைத்தொழில் அமைச்சருக்கும் வழங்காத நிதியை தற்போதிருந்த அமைச்சருக்கு வழங்கியுள்ளனர். கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக 05 பில்லியன் ரூபா வழங்கப்பட்டது. ஆனால், ஏதேனும் செய்யாது, எதிர்கட்சியின் நோக்கத்தை நிறைவேற்றி, எதிர்காலத்தில் பதவிகளுக்கு வருவதற்காக நாட்டை காட்டிக்கொடுக்கும் செயற்பாடுளையே பதவி நீக்கப்பட்ட அமைச்சர்கள் முன்னெடுத்தனர்.

அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களும் இவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கும் அமையே, அவர்கள் இருவரையும் ஜனாதிபதி அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கினார் - என்றார்.

அரசின் பங்காளிகளாக...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தற்போதுள்ள நிலைமையில் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட வேண்டியது அமைச்சரவையுள்ள சகல அமைச்சர்களினதும் கட்டாய பொறுப்பாகும். அதேபோன்று, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கான தீர்வை பெற்றுக்கொடுக்க அவசியமான தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டியதும் அமைச்சரவையின் பொறப்பாகும்.

மறுபுறம் அரசாங்கத்தையும் பாதுகாத்துக்கொண்டு பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு காண்பதே ஆளுங்கட்சியினின் பொறுப்பாக இருக்கிறது.

அவ்வாறிருக்கையில், ஆளுந்தரப்பிலுள்ள சிலர் தனித்துச் சென்று மாநாடுகளை நடத்தி, எதிர்தரப்பினர் கடமைகளையும் எதிர் தரப்பினர் செய்ய வேண்டிய விடயங்களையும் ஆளுந்தரப்பிலுள்ள உறுப்பினர்கள் முன்னெடுப்பது எதிர்த்தரப்பினருக்கு ஆதரவளிக்கும் வகையிலான செயற்பாடாகும்.

நானும் 30 வருட காலமாக அரசியலில் செயற்பட்டு வருகின்றேன். ஆளுந்தரப்பிலுள்ள உறுப்பினர்களின் இவ்வாறான செயற்பாடுகள் துரோகமாகும். இவ்வாறான செயற்பாடுகள் அரசியல் நடைமுறைக்கு பொருத்தமற்றவையாகும் என்றே எனது புரிதலாகும் என்றார்.

இதேவேளை, தற்போது உலகிலுள்ள நெருக்கடியின் பத்திலில் எமது நிதி அமைச்சருக்கு பதினான்கு அறிவு இருந்தாலும் டொலர் நெருக்கடி பொருளாதார நெருக்கடியை இல்லாமலாக்குதல், பொருளாதாரத்தை வலுப்படுத்தல் போன்ற விடயங்கள் இலகுவானவை இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவே பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்து நல்லாட்சியிடமிருந்து நாட்டை காப்பாற்றினார். கொரோனா தொற்றுப் பரவல் உலகுக்கிலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்டுள்ள வரிசைகள், டொலர் தட்டுப்பாடு, ரஷ்யா - உக்ரைன் போர் ஆகிய பிரச்சினைகளுக்கு பெசில் ராஜபக்ஷ பொறுப்பாக முடியாது.

உதய கம்மன்பிலவின் செயற்பாடுகள் அவர் வலுசக்தி அமைச்சராக என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தனக்கு விசேட பொறுப்பை ஒப்படைத்ததன் பின்னர், அதற்கு அவசியமான விடயங்களையே முன்னெடுக்க வேண்டும். குறைபாகள் இருக்குமாக இருந்த அமைச்சரவை அல்லது நாட்டின் தலைவருடன் அதுதொடர்பில் கலந்துரையாட வேண்டும்.

அவ்வாறில்லாமல் காலையும் மாலையும் மின்னூடிப்பு மேற்கொள்ளும் நேரம், மீண்டும் மின் விநியோகிக்கப்படும் நேரம், மேலும் மூன்று மாதங்களுக்கு மின்சாரம் முறையாக கிடைக்காது. ஆறு மாதங்களுக்கு தேவையான மின்சாரம் இல்லை என தெரிவித்து மக்களை பயமடையச் செய்து நாட்டில் ஒவ்வொரு இடங்களிலும் வரிசைகளை உருவாக்குவது அமைச்சரொருவருடைய பொறுப்பு இல்லை.

அரசு பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

"நீதி கிடைக்கும் வரை...

நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை, அமைச்சுப் பதவியிலிருந்து விலகப்போவதில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, நாங்கள் மூவரும் இணைந்து முன்னெடுத்த சிறந்த வேலைத்திட்டத்தை பற்றி கவனத்தில் கொள்ளாது. இவர்கள் இருவரையும் பதவிகளிலிருந்து நீக்கியது தவறு என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

'மழுழ நாடும் சரியான பாதையில்' என்ற தொனிப்பொருளில் நடத்திய மாநாட்டை தொடர்ந்து அமைச்சு பதவிகளிலிருந்து விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று (04) நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு நாங்கள் முன்னெடுத்த முழு நாடும் சரியான பாதையில் என்ற மாநாடே காரணம் என்றால், இங்கு ஆரம்பம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது என்றே அர்த்தம். ஆனால், இவர்கள் இருவரையும் பதவியிலிருந்து நீங்குவதற்கு அரசத் தலைவர் எடுத்த நடவடிக்கை தவறானது. எனவே, அரசாங்கம் இதற்கான நீதியை வழங்கும் வரை என்னால் அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது. அமைச்சரால அமைச்சரவைக்குச் செல்லவோ, அமைச்சின் கடமைகளை நிறைவேற்றவோ என்னால் முடியாது.

நாங்கள் மூவர் உள்ளிட்ட 11 கட்சிகளும் இணைந்து நாடு முகங்கொடுத்துள்ள பாதிப்பிலிருந்து மீள்வதற்கான தீர்வுகளையே முன்வைத்துள்ளோம். ஆபத்திலிருப்பதாக சிவப்பு சுமிக்ஞை ளரியும்போது, அதனை அணைப்பது சரியா, அதனையே இவர்கள் செய்துள்ளனர்.

முழு நாட்டு மக்களையும் இணைப்பதற்கு பொறுப்புள்ளது. ஆனால், அதற்காக நாங்கள் எதிர்கட்சியுடன் இணையமாட்டோம். மாறாக, நாட்டுக்காக முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்துக்கு மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதே எங்களுடைய நிலைப்பாடாகும். இவர்கள் இருவரும் அதிக மக்கள் விருப்புகளை பெற்றவர்கள் என்ற அடிப்படையில் இவர்கள் இருவருக்கும் செய்துள்ள அநீதியானது மக்களுக்கு எதிராக செய்த அநீதியாகும்.

நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால், குறுகிய கால தீர்வுகளை உடனடியாக எடுக்க வேண்டும். எனவே, பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இவர்களுக்கு இழைத்த அநீதிக்கு நீதி கிடைக்கும் வரை நான் அமைச்சுப் பதவியிலிருந்து விலக மாட்டேன். மாறாக, அமைச்சின் கடமைகளிலிருந்து விலகுவதுடன், அமைச்சரவைக்கும் செல்லமாட்டேன். நாங்கள் மூவரும் இணைந்து முன்னெடுத்த சிறந்த வேலைத்திட்டத்தை பற்றி கவனத்தில் கொள்ளாது. இவர்கள் இருவரையும் பதவிகளிலிருந்து நீக்கியமைக்கு நான் எதிர்ப்பை தெரிவிக்கின்றேன். அரசாங்கம் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் - என்றார்.

முன்னுரிமை அடிப்படையில்...

நாட்டுக்கு வந்துள்ள டீசல் எரிபொருள் விநியோகம் நேற்று ஆரம்பமானது.

முத்துராஜவெல பெற்றோலிய சேமிப்பக வளாகத்தில் கப்பல் தரையிறக்கும் பணி நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆரம்பமானது. ஆனால், 37,300 மெற்றிக் தொன் டீசலை இறக்குவதற்கு நான்கு நாட்கள் ஆகும் எனக் கூறப்படுகிறது.

இதன்படி, முத்துராஜவெல பெற்றோலிய சேமிப்பக வளாகத்தில் தரையிறக்கியுள்ள டீசலை எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வரை முழுமையாக பெற்றுக்கொள்ளும் முன்னர் அவற்றை விநியோகிப்பதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, 37 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் எரிபொருளை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனினும், நேற்று நாட்டின் பல பகுதிகளிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசையில் பொதுமக்கள் காத்திருந்தனர்.

யுகதனவி ஒப்பந்த...

தீர்மானத்தை அதிகாரபூர்வமற்றதாக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த 05 அடிப்படை உரிமை மனுக்களை விசாரணைக்கு எடுக்கமால் நிராகரிக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் புவனேக அலுவிஹாரா, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் எம்.டீ.பீ. தெஹிதெனிய ஆகிய ஐவரடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாமினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக பிரதிவாதிகளுக்கு பிடியாணை பிறப்பிக்காமல் இருக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய அறிவித்துள்ளார்.

அதற்கமைய, குறித்த ஐந்து மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமல் இரத்து செய்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்காவிடமிருந்து...

ஆனால், நாட்டில் ஏற்படுத்திய நெருக்கடிகள் தொடர்பாகவும் அதற்கு யார் பொறுப்பு என்பதையும் சாட்சியங்களுடன் எதிர்வரும் காலத்தில் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம் என பதவி நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவைச்சணமான அமெரிக்கரால் இலங்கையில் தீர்மானங்கள் எடுக்கப்படுவதால் அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முழு நாடும் சரியான பாதையில் என்ற தொனிப்பொருளில் நடத்திய மாநாட்டை தொடர்ந்து அமைச்சுப் பதவிகளிலிருந்து விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று (04) நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதாரம் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்துக்குள் உரிய செயற்பாடுள் எடுக்கப்படாதமையினால் முழு நாடும் சரியான பாதையில் என்ற தொனிப்பொருளில் சில யோசனைகளை முன்வைத்தோம். அதனை பிரச்சினைகளுக்கான தீர்வாக எடுத்துக்கொள்ளாது என்னையும் விமல் வீரவங்சவையும் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கம் செல்லும் பாதை குறித்து நாங்கள் விமர்சனங்களை முன்வைத்தாலும் அமைச்சரவையின் உறுப்பினர்கள் என்ற வகையில் எங்களுக்கு சில பல தடைகளும் இருந்தன. இதுவரை நாக்கை கட்டிப்போட்டு, திக்கித்திக்கி பேசுவது போன்றே பேசிக்கொண்டிருந்தோம். ஆனால், இந்த நாட்டை இந்த நிலைமைக்கு அழைத்துச் சென்றது எப்படி, அதற்கு பொறுப்புக் கூற வேண்டியது யார் என்பதை தற்போது சுதந்திரமாக கூற முடியும் என்பதோடு, இந்த நாட்டில் ஏற்படுத்திய நெருக்கடிகள் தொடர்பாகவும் அதற்கு யார் பொறுப்பு என்பதையும் சாட்சியங்களுடன் எதிர்வரும் காலத்தில் நாட்டுக்கு வெளிப்படுத்துவோம்.

தென்கிழக்காசிய நாடுகளில் அமெரிக்க இராஜதந்திரிகளின் தோல்வியை சித்திக்கும் அவைச்சணமான அமெரிக்கன் நாவலில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தற்போது இலங்கையில் அரங்கேறுகின்றன. மீண்டும் அமெரிக்காவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. நாங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை முன்னெடுப்பதற்கு முயற்சிக்காது, 1997ஆம் ஆண்டு இந்தோனேஷியா இருந்த நிலைமைக்கு இந்த நாட்டை கொண்டுச் செல்வதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன.

நாங்கள் அரசாங்கத்துடன் இல்லாவிட்டாலும் நாட்டை அமெரிக்காவின் பிடியிலிருந்து மீட்பதற்கான போராட்டத்தில் மக்களுக்கு தலைமை தாங்குவோம் - என்றார்.

எரிபொருள் - மின்...

கட்டணங்களை உடனடியாக அதிகரிக்குமாறு இலங்கை மத்திய வங்கி மீண்டும் அரசாங்கத்துக்கு பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டிய 08 யோசனைகள் தொடர்பாக நாளைய சபை அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. அதன்படி, மத்திய வங்கியினால் முன்னர் பரிந்துரைக்கப்பட்டபடி அத்தியாவசியமற்ற இறக்குமதிகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணம் அனுப்புதல் மற்றும் முதலீட்டை மேலும் ஊக்குவிக்கவும் நாளைய சபை யோசனை முன்வைத்துள்ளது. பொருத்தமான வரி அதிகரிப்புகள் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிப்பதற்கும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், அத்தியாவசியமற்ற மற்றும் அவசர மூலதனத் திட்டங்களை ஒத்திவைக்குமாறும் இலங்கை மத்திய வங்கியின் நாளைய சபை, அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வட்டி வீதங்களைப் பாதிக்கும் கொள்கை வட்டி வீதங்களை உயர்த்துவதற்கும், நிலையான வைப்பு வசதி விகிதம் 6.5 வீதமாகவும் நிலையான கடன் வசதி விகிதம் 7.5 வீதமாகவும் மத்திய வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது. இதனால், வங்கி விகிதம் தானாகவே 10.5 சதவீதமாக உயரும் எனவும் மத்திய வங்கியின் நிதி சபை தெரிவித்துள்ளது.

விமல், உதய...

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் பற்றிய கருத்துகள் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் ஆகியோர் மத்தியில் இன்று (நேற்று) இடம்பெற்ற உரையாடலின்போது, விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஒருபோதும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணியாக சேர்ந்துகொள்ளப்படட மாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் பிரேமதாச, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனிடம் தெரிவித்துள்ளார். இனவாதிகளை எம்முடன் தோர்துலுக்கு முன்னரோ, பின்னரோ இணைத்துக்கொள்ள மாட்டேன் என மேலும் ஸஜித் பிரேமதாச எம்.பி. தன்னிடம் கூறியதாக மனோ எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் ஆட்டம் காண்கிறது. வரலாறு முழுக்க தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக இனவாதம் ஃக்கிய முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். இன்றைமும் பலர் வெளியேற்றப்படவுள்ளனர். இந்நிலையில், வழமைபோல் புதிய கூட்டணிகள், புதிய நகர்வுகள் நிகழ்கின்றன.

விமல், உதய ஆகியோரின் பதவிகள் காலி. ரத்ன தேரருக்கு பதவி இல்லை. இருந்தால் அதுவும் போயிருக்கும். இவர்கள் அரசியலில் இவங்களை இனவாத பிதா மைந்தர்கள். ஆகவே இவர்கள் மீது எவருக்கும் அனுதாபம் இல்லை. நாட்டில் ராஜபக்ஷர்கள் மீது பெரும் வெறுப்பு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஆனால், விமல், உதய ஆகிய இருவரை விட ராஜபக்ஷர்களுக்கு ஏற்புடமை உண்டு. இவர்களுக்கு அதுவும் இல்லை.

தமிழ் - முஸ்லிம் எதிர்ப்பு, இந்து - இஸ்லாம் - கத்தோலிக்க எதிர்ப்பு என்ற இன, மத அடிப்படைவாதங்களை இலங்கையில் ஸ்தாபனரீதியாக முன்னின்று நடத்தியவர்கள் இவர்கள் மூவருந்தான். அதை வரலாறு அறியும். நான் நன்கு அறிவேன். இந்த நிமிடம்வரை கூட்டணிக்கு திருந்தாத இவர்கள் இடம்பெறும் ஆட்சியில் நான் இருக்க தயாரில்லை. இந்த நோக்கிலேயே எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான ஸஜித் பிரேமதாச எம்.பியுடன் நான் உரையாடினேன். அதற்கு உரிய சிறப்பான பதிலை அவர் எனக்கு கூறியுள்ளார். அதையிட்டு மகிழ்வடைகிறேன்.

விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, ரத்ன தேரர், இனவாத வினை விதைத்தார்கள். இன்று ஊழ்வினை வினை அறுக்கிறார்கள். "அறு தம்பி, அறு... நன்றாக அறு..!" என நாம் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கத்தான் வேண்டும். சிங்கள ஊடகங்களில் நான் இவர்களை பார்த்துக்கொள்வேன்.

அரசில் இருந்து வெளியேறும், வெளியேற்றப்படும் வேறு சிலருக்கு இங்கே இடம் இருக்கலாம். ஆனால், நிச்சயமாக இத்தலைய அக்மார்க் இனவாதிகளுக்கு இடமிருக்க முடியாது. இடம்தந்து மீண்டும் ஒருமுறை இன்னொரு சுற்றுவட்டம் போக முடியாது. அதை எமது தமிழ், முஸ்லிம் மக்கள் தாங்க மாட்டார்கள். இன்று நேசிய சூழல், சர்வதேச சூழல் ஆகியவை பொருந்தி வருகின்றன. அவற்றை மீண்டும் பாழடிக்க இந்த இனவாதிகளுக்கு இடமளிக்க முடியாது. அத்தலைய எந்தவொரு முயற்சியையும் நான், முற்போக்கு சக்திகளுடன் சேர்ந்து எதிர்ப்பேன் எனத் தெரிவித்துள்ளார்.

ஓர் அவலச்சன...

பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார் என பதவி நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அத்தோடு, இனி எப்போதும் இந்த ஜனாதிபதியின் அமைச்சரவையில் அமைச்சு பதவிகளை வகிப்பதற்கு நாங்கள் தயாரில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

முழு நாடும் சரியான பாதையில் என்ற தொனிப்பொருளில் நடத்திய மாநாட்டை தொடர்ந்து அமைச்சு பதவிகளிலிருந்து விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று (04) நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் எங்களுடைய கூட்டணிகள் பாரிய போராட்டம் காணப்பட்டது. குறிப்பாக, பெசில் ராஜபக்ஷவுக்கு தான் ஜனாதிபதி வேட்பாளராக வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்காக, பூரீலங்கா பொதுஜன பெரமுனவை தன்னகத்தே வைத்துக்கொண்டு பல ஏற்பாடுகளையும் திட்டங்களையும் முன்னெடுத்திருந்தார்.

ஆனால், மறிறிந்த ராஜபக்ஷவினால் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க முடியாமல்விட்டால், கோட்டாபய ராஜபக்ஷவை களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாடே எங்களிடமிருந்தது. இதற்கமையவே நாங்களும் செயற்பட்டோம். அது பெசில் ராஜபக்ஷவின் ஜனாதிபதி கனவுக்கு பெரும் தடையாக மாறியது. இதனால் விருப்பமில்லாது கோட்டாபய ராஜபக்ஷவை வேட்பாளராக ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பெசில் ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது.

அதேபோன்று, 2015ஆம் ஆண்டு தோர்தலில் தோல்வியடைந்த பின்னர் மறிறிந்த ராஜபக்ஷவை சந்தித்த பெசில் ராஜபக்ஷ, தனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். ஆனால், அதற்கு பிரதமர் மறிறிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவிக்காததமையினால் அவரை விட்டு அமெரிக்காவுக்குச் சென்றார். இவ்வாறான ஒருவரை ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ளும் நோய் எங்களுக்கு இருக்கவில்லை.

இதனால் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தோம். இங்கு ஆரம்பித்த முரண்பாடு அரசாங்கத்துக்குள்ளும் அமைச்சரவைக்குள்ளும் தொடர்ந்தும் காணப்பட்டது. குறிப்பாக, 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போது, இரட்டைக் குடியுரிமைகொண்ட ஒருவருக்கு அமைச்சுப் பதவிகளை வகிப்பதற்கு நாங்கள் எதிர்ப்புகளை தெரிவித்தோமும் இந்த முரண்பாடு காணப்பட்டது. அதேபோன்று, யுகதனவி விடயம் மற்றும் கொழும்பு கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் விடயத்திலும் இந்த முரண்பாடு காணப்பட்டது.

எனவே, இது கொள்கை ரீதியாக காணப்பட்ட முரண்பாடே தவிர, தனிப்பட்ட முரண்பாடல்ல. இந்த கொள்கை ரீதியான முரண்பாடு இன்று பொருளாதாரத்திலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், இந்த பாதிப்பிலிருந்து மீள்வதற்கான யோசனைகளை முன்வைக்கும் பொறுப்புக்கு அமையவே 11 கட்சிகளும் இணைந்து கடந்த நாட்களில் மாநாட்டை நடத்தினோம்.

இதன்போது, நாட்டின் ஆபத்து பற்றியும் நிதி அமைச்சின் கவனமீனம் தொடர்பாகவும் நான் உரையாற்றினேன். இந்த உரைக்கு பின்னர் என்னையும் உதய கம்மன்பிலவையும் அமைச்சு பதவியிலிருந்து நீக்கவிட்டால் நான் அமைச்சரவைக்கு வருகை தரமாட்டேன் என பெசில் ராஜபக்ஷவின் ஜனாதிபதி கனவுக்கு பெரும் தடையாக மாறியது. இதனால் விருப்பமில்லாது கோட்டாபய ராஜபக்ஷவை வேட்பாளராக ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் பெசில் ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது.

அதேபோன்று, 2015ஆம் ஆண்டு தோர்தலில் தோல்வியடைந்த பின்னர் மறிறிந்த ராஜபக்ஷவை சந்தித்த பெசில் ராஜபக்ஷ, தனக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார். ஆனால், அதற்கு பிரதமர் மறிறிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவிக்காததமையினால் அவரை விட்டு அமெரிக்காவுக்குச் சென்றார். அமையவே நாங்கள் செயற்பட்டுள்ளோம். இதற்கு எங்களுடைய அமைச்சு பதவிகளே பதில் என்றால் அதற்கு நாங்கள் மகிழ்ச்சியடைவதோடு, நீக்கியதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான யோசனைகளையே கடந்த மாநாட்டில் முன்வைத்தோம். அதன்படி, எங்கள் இருவரையும் அமைச்சு பதவியிலிருந்து நீக்கினால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என நிதி அமைச்சர் வழங்கியுள்ள ஆலோசனைக்கு அமையவே எங்களை பதவி நீக்கியிருக்க வேண்டும்.

எனவே, இனி எப்போதும் இந்த ஜனாதிபதியின் அமைச்சரவையில் அமைச்சு பதவிகளை வகிப்பதற்கு நாங்கள் தயாரில்லை. எங்களுடைய பதவி விலக்கலுக்கு பிரதமரின் விருப்பம் இருக்கவில்லை. அவர் எனக்கும் உதய கம்மன்பிலவுக்கும் தொலைபேசியில் பேசினார். அவர் கவலையாகவே பேசினார்.

அவைச்சணமான அமெரிக்கனான பெசில் ராஜபக்ஷவே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றார். குறிப்பாக, அவரே பொருளாதார நெருக்கடியை நீடிப்பதற்கு வழிவகுத்து பார்த்துக்கொண்டிருக்கின்றார். அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்படுவோர்கள் என்ற அச்சத்தில் நாங்கள் செயற்படவில்லை. நீக்குவது அவர்களின் செயற்பாடு. ஆனால், உண்மையை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும

அமைச்சுகளில் நேற்றும் புதிய மாற்றங்கள்!

அமைச்சுகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்திற்கிணங்க, இரண்டு அமைச்சரவை அமைச்சர்களும் ஒரு இராஜாங்க அமைச்சரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத்தில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தனது பதவியை இராஜினாமா செய்த அருந்திக பெர்னான்டோ, மீண்டும் இராஜாங்க அமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சி.பி. ரத்நாயக்க - வனவிலங்கு மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர்.

திலும் அமுனுமா - போக்குவரத்து அமைச்சர்.

விமலவீர திசாநாயக்க - அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்.

அருந்திக பெர்னான்டோ - தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த பொறிமுறைப் பண்டங்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தும் கலந்துகொண்டார்.

மாவனல்லை பிரதேச சபையின் புதிய தலைவராக நொயெல் ஸ்ரீவன் தெரிவு

(அமீர் ஹுசைன்)

மாவனல்லை பிரதேச சபையின் புதிய தலைவராக ஆர்.பி.நொயெல் தசந்த ஸ்ரீவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிடமாகி இருந்த தலைவர் பதவிக்கு புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு சப்ரகமுவ மாகாண ஆணையாளரின் முன்னிலையில் நேற்று (04) மாவனல்லை பிரதேச சபையில் நடைபெற்றது. இந்த வாக்கெடுப்பில் ஸ்ரீவனுக்கு ஆதரவாக 22 வாக்குகள் கிடைத்தன.

பொதுஜன பெரமுன கட்சியை அங்கம் வகிக்கும் நொயெல் தசந்த ஸ்ரீவனுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் 15 வாக்குகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 06 வாக்குகளும் 01 சுயேட்சை வாக்குகளுமாக 22 வாக்குகள் கிடைத்தன. மாவனல்லை பிரதேச சபையின் அங்கத்தவர் எண்ணிக்கை 40 ஆக இருக்கின்ற நிலையில் முன்னாள் தலைவர் ஜயவந்தன, கே.பி.பியதிஸ்ல உட்பட 04 பேர் போட்டியிட்டபோதும் ஏனையவர் களால் 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளை பெற முடியவில்லை.

ஏற்கனவே 2022ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தை முறையாக நிறைவேற்ற வில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னைய தலைவராக இருந்த ஜயவந்தனவை விசேட அரசாங்க அறிவித்தல் மூலம் சப்ரகமுவ மாகாண சபையின் ஆளுநர் திக்கிரி கொப்பேகடுவ பதவி நீக்கியதாக அறிவிப்பு செய்திருந்தார்.

அதனை ஆட்சேபித்து முன்னாள் தலைவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தபோதும் அந்த மனு கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து புதிய தலைவரை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடைபெற்றது. முன்னாள் உப தலைவர் பியதிஸ்லவும் தலைவர் பதவிக்கு போட்டியிட்ட போதும் அவரால் 07 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

புதிய தலைவர் ஸ்ரீவன் தாமரை மொட்டு சின்ன கட்சியை பிரதிநிதித்துவம் செய்தவராக இருந்தாலும் அவருக்கு ஆதரவாக பொதுஜன பெரமுன உறுப்பினர்களின் வாக்குகள் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.பி. ஒருவரின் ஆதரவாளரெனக் கூறி மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரிடம் அட்டகாசம்





(யாழ் நிருபர்)

மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரின் வீட்டிற்குள் மதுபோதையில் புகுந்த நபர் ஒருவர் உறுப்பினரின் தந்தையை தாக்க முற்பட்டதுடன், வீட்டின் வேலிகளை சேதப்படுத்தி சென்றுள்ளார்.

மானிப்பாய் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராான அ.ஜோன் ஜிப்பிரிக்ஸோ என்பவரின் வீட்டின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பிலுள்ள அவரது வீட்டினுள் நேற்று முன்தினம் இரவு மின்னாரம் துண்டிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் மதுபோதையில் நுழைந்த நபர் ஒருவர், நாடாளுமன்றில் ஆளும் கட்சியைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் பெயரைக் கூறி, அவரின் ஆதரவாளர் தான் எனக் கூறி அட்டகாசம் செய்துள்ளார்.

இதன்போது பிரதேச சபை உறுப்பினரின் தந்தையார் அதனை தடுக்க முற்பட்டவேளை அவரை தள்ளி விழுத்திய பின்னர் வீட்டின் சேற்றை சேதப்படுத்தியதுடன், வேலி தகரங்களையும் சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினரால் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது .

ரயில் முன் பாய்ந்து ஒருவர் உயிர்மாய்ப்பு

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் ரயில் முன் பாய்ந்து ஒருவர் தனது உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் முன் பாய்ந்து அவர் உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

மோட்டார்சைக்கிளில் வந்த குறித்த நபர் அதனை வீதியில் நிறுத்திவிட்டு ரயில் முன் பாய்ந்தார் என அங்கு நின்றவர்கள் தெரிவித்தனர்.

தீ விபத்தில் வீடொன்று சேதம்!

(ஐ.எல்.எம் நாஸிம்)

அம்பாறை, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறை புளோக் ஜே மேற்கு 1 பிரிவிலுள்ள வீடொன்றில் நேற்று இரவு ஏற்பட்ட தீ விபத்தினால் வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளது.

நேற்று முன்தினம் (03) மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் குறித்த வீட்டில் உள்ளவர்கள் தமது வீட்டுக்கு பக்கத்திலுள்ள உறவினரின் வீட்டுக்கு சென்றுள்ளனர். பின்னர் மின்சாரத்திற்குரிய தடை விலகிய பின்னர் (அதாவது மின்சாரம் வந்ததன்)பின்னர் இரவு 9.30 மணியளவில் தமது வீட்டுக்கு வந்தபோது வீட்டிலிருந்து புகை வெளியாகிக் கொண்டிருப்பதனை அவதானித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து வீட்டுக்குள் சென்றபோது வீட்டின் ஒரு அறையிலிருந்த மடிக்கணினி, உடுதுணிகள் மற்றும் பெறுமதிவாய்ந்த பொருட்கள் யாவும் தீயில் எரிந்துள்ளதைக் கண்டுள்ளனர். வீட்டின் கூரைக்கு போட்டுள்ள சீட்டும் உடைந்துள்ளது. இச்சம்பவம் குறித்து சம்மாந்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பின் சில பகுதிகளில் இன்று நீர்வெட்டு அமுல்

கொழும்பின் சில பிரதேசங்களில் இன்று நீர்வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கமளித்து அந்தச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

கொழும்பு 07, 08, 10, 12, 13, 14 மற்றும் 15 ஆகிய பகுதிகளுக்கு இன்று (05) காலை 08 மணிமுதல் 14 மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப்படும்.

மேலும், கொழும்பு 02, 03 மற்றும் 11 ஆகிய பகுதிகளுக்கு குறைந்த அழுத்தத்திலேயே நீர் விநியோகிக்கப்படுமென அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற அரச நாடக விழா

அரச நாடக விழா மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

தமிழ் நாடகமான எஸ்.ஜீவராஜாவின் 'வேட்டைக்காரர்' எனும் நாடக ஆரம்ப நிகழ்வில் டவர்ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

நாடக தயாரிப்பாளரான ஜீவராஜாவுக்கு சிறப்பு விருதினை பிரபல நாடக நடிகை ரஞ்சனி ராஜ் மோகன் வழங்கினார். கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் தரணி அனோஜாவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

சட்டவிரோதமாக 30இற்கும் மேற்பட்ட ஆடுகளை கொண்டுசென்ற இருவர் கல்முனையில் கைது

(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டுசெல்லப்பட்ட 30இற்கும் அதிகமான வளர்ப்பு ஆடுகளை மீட்டதுடன், இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணை பகுதியிலுள்ள பொலிஸ் சாவலரனில் குறித்த ஆடுகளைக் கொண்டுவந்த லொறி உட்பட இருவர் நேற்று வெள்ளிக்கிழமை (04) மதியம் கைதுசெய்யப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் பகுதியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி கொண்டுவரப்பட்ட சுமார் 30இற்கும் அதிகமான ஆடுகளே இவ்வாறு கல்முனை பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

இவ்வாறு சட்டவிரோதமாக வழித்தடை அனுமதிப்பத்திரமின்றி கால்நடைகளை லொறி ஒன்றில் அடைத்துச்சென்ற நிலையில் மீட்கப்பட்ட ஆடுகள் தொடர்பிலான நடவடிக்கையினை கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சர் ரி.எச்.எம். லஃத் புத்திக்கவின் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். ரம்ஸீன் பக்கீர் வழிகாட்டலில் துரிதமாக செயற்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் சிசிரகுமார (53500) றஹீம் (44013) பொலிஸ் உத்தியோகத்தர்களான சேனநாயக்க (92729) பொலிஸ் சாரதி வசந்த (80873) உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேற்கொண்டனர்.

மேலும் குறித்த ஆடுகளை சட்டவிரோதமாகக் கொண்டுசென்ற 47 வயது மற்றும் 59 வயது இரு சந்தேக நபர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சர்வதேச அமைப்புகளின் முதலீடுகளையும் ஒத்துழைப்புகளையும் வரவேற்கின்றோம்

அமைச்சர் டக்ளஸ் பகிரங்க வேண்டுகோள்

நிலைபேறான அபிவிருத்தியை மேலும் முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு தொழில்நுட்ப ஒத்துழைப்புகளையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புகளிடமிருந்து வரவேற்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் நீர்வேளாண்மை துறைகளில் மேற்கொள்ளக்கூடிய நிலையான அபிவிருத்தி முகாமை தொடர்பாக உலக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது.

கொழும்பு, ஷங்கரில்லா நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

'இலங்கையின் கடற்றொழில் மற்றும் நன்னீர், பருவகால மீன் வளர்ப்பு, கடலட்டை வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை சார்ந்த வளங்களை அடையாளப்படுத்தி ஒருங்கிணைப்பதன் மூலம் நிலைபேறான பொருளாதார நன்மைகளை ஏற்படுத்துவது தொடர்பான பல திட்டங்களும் பொறிமுறைகளும் கடற்றொழில் அமைச்சிடம் காணப்படுகின்றன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிநடத்தலில், நிதி அமைச்சர் பெஷில் ராஜபக்ஷவின் ஆலோசனைகளுடன் திட்டமிடப்பட்டுள்ள குறித்த பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளையும் முதலீடுகளையும் உலக வங்கி போன்ற அமைப்புகளிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்" என்று தெரிவித்தார்.

மேலும், பல்வேறு வளங்களுக்கு மத்தியில் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சர்வதேச அமைப்புகளின் எதிர்பார்ப்புகளையும் சர்வதேச நியமங்களையும் பூர்த்திசெய்யும் வகையில் பலநாள் மீன்பிடிக் கலன்களின் தொழில்முறைகள் உட்பட கடற்றொழில்சார் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புதிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, நன்னீர் மற்றும் பருவகால மீன்வளர்ப்பு போன்ற நீர்வேளாண்மை மூலம் தற்போது மொத்த மீன் உற்பத்தியில் 17 வீதத்தினை பெற்றுக்கொள்வதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், எதிர்வரும் 2025ஆம் ஆண்டளவில் மொத்த உற்பத்தியில் சுமார் 30 வீத உற்பத்தியை நீர்வேளாண்மை ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுவருகின்ற கடலட்டை பண்ணைகளை உருவாக்குவதிலும் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டிய கடற்றொழில் அமைச்சர், கிளிநொச்சி மாவட்டத்தில் 6 கடலட்டை கிராமங்கள் ஊடாக சுமார் 355 பண்ணைகளை உருவாக்கியுள்ளமையையும், யாழ். மாவட்டத்தில் 19 கடலட்டை ஏற்றுமதிக் கிராமங்களை உருவாக்கி சுமார் 467 பண்ணைகளை உருவாக்கி இருக்கின்றமையையும் சுட்டிக்காட்டியதுடன் ஆழ்கடல் மீன் பிடிய வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மயிலிட்டித் துறைமுகம் உள்ளிட்ட துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதையும், பருத்தித்துறை, குருநகர், பேசாலை போன்ற தேவையான பிரதேசங்களில் புதிய துறைமுகங்களை அமைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளையும் தெளிவுபடுத்திய பிறகு தமை குறிப்பிடத்தக்கது

வார வெளியீட்டின் இலவச இணைப்பிதழாக

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, வீரோமா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 05 ஆம் திகதி, சனிக்கிழமை

சம்பந்தனின் கருத்தும் நியாயமும்!

இலங்கை குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை, இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரம் அச்சம் தரும் விதத்தில் வீழ்ச்சியடைகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்படுட்ளதாக அரசாங்கம் தெரிவிப்பதற்கு மாறானதாக மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை காணப்படுகின்றதெனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 25ஆம் திகதி வெளியான அறிக்கை, இன மற்றும் சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான பாரபட்சங்களையும் பாதுகாப்புப் படையினர் சிலில் சமூகத்தைச் சேர்ந்தவர்களை இலக்குவைத்தல் மற்றும் கடந்தகால துஷ்பிரயோகங்களுக்கான பொறுப்புக்கூறல் முடக்கப்பட்டுள்ளது என்பதையும் பதிவு செய்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பச்லெட் முன்வைத்துள்ள-இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு எதிரான தடைகள், இலங்கையில் ஒழுக்கப்பட்ட சர்வதேச குற்றங்களுக்காக சர்வதேச நீதியாணையின் கீழ் நீதியை வழங்குவதற்காக முயற்சித்தல், துன்புறுத்தலிற்கு உள்ளாகக்கூடிய இலங்கையர்களுக்கு புகலிடம் வழங்குதல், 2021ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஐக்கிய நாடுகள் பொறுப்புக்கூறும் திட்டத்திற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பரிந்துரைகளை ஐக்கிய நாடுகளின் உறுப்புநாடுகள் நிறைவேற்றவேண்டும்.

ஐ.நா. இலங்கை பாதுகாப்புப் படைகளுடனான தனது ஈடுபாட்டின்போது மனித உரிமைகளின் தராதரங்களை பேணவேண்டும். இலங்கை அரசாங்கம் அதன் மனித உரிமை செயற்பாடுகள் குறித்த சர்வதேச சமூகத்தின் ஆய்விற்கு தவறான பிழையாக வழிநடத்தும் பிரசார நடவடிக்கைகள் மூலம் பதிலளித்துள்ளது - என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான பணிப்பாளர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை பாதுகாப்புடன், சட்டத்தின் ஆட்சியை மீறும் அதேவேளை, இலங்கை அரசாங்கம் சிறுபான்மையினத்தவர்களையும் சிவில் சமூகத்தினரையும் தீவிரமாக இலக்குவைப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியிருப்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

இந்தப் பின்னணியில் இவ்விடயம் தொடர்பில் சில முக்கிய காரணிகளைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும். சிறப்பு நிபுணர் குழுவின் அறிக்கையில், குறிப்பாக இறுதி யுத்த கட்டத்தில் நம்பத்தகுந்த சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும், அவை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மை உறுதிசெய்யப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளரின் உள்ளக விசாரணையும் இதனையொத்த ஒரு முடிவிற்கு வந்துள்ளது. இலங்கையின் தற்போதுள்ள அரசாங்கமும் முன்னைய அரசாங்கங்களும் இதுவரை எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கமானது முன்னைய அரசாங்கம் முன்மொழிந்த பொறுப்புக்கூறலை உறுதிசெய்யும் வகையில் கலப்பு பொறிமுறை அடங்கிய இனை அனுசரணை பிரேரணையிலிருந்து விலகிக்கொண்டது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை. இலங்கை அரசாங்கமானது சுதந்திரமடைந்ததுமுதல் நீண்டகாலமாக ஆழமான தண்டனையின்மை கலாசாரத்தில் ஊறியுள்ளது.

இது தமது அரசியல் பலத்தைத் தொடர்ந்தும் தக்கவைப்பதற்காக சிங்கள - பௌத்த பேரினவாதத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக உள்ளக வாக்குறுதிகளை மதிக்காமலும் அதன் விளைவாகக் கொடுத்த வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதிலும் சரியான முடிவுகளை எடுப்பதிலும் அல்லது வேறெந்த ஒரு விடயத்திலும் தீர்மானம் எடுக்கும் நிலைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

எல்லா அரசாங்கங்களும் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருப்பதற்காக பேரினவாதத்தினை ஆதரிக்கும் கொள்கைகளை முன்னிறுத்தி வந்துள்ளனர். இது இலங்கை நாட்டிற்கு பாரிய பாதகங்களைக் கொண்டுவந்துள்ளதுடன், ஒருமித்த இலங்கை நாட்டின் மக்களையும் இது பாதித்துள்ளது.

உண்மை நிலைமையினை சிங்கள - பௌத்த மக்களிற்கு எடுத்துக் கூறினால் அவர்கள் நிலைமையைப் புரிந்துகொள்வார்கள், ஆனால், ஒருசில சிங்களத் தலைவர்களை விட ஏனையவர்களிற்கு இதனை செய்வதற்குத் தெரியும் இல்லை. இலங்கை முகங்கொடுத்துள்ள வரலாறு காணாத பிரச்சினைக்கும் மீண்டெழுந்து வரமுடியாத நிலைமைக்கும் இதுவே பிரதான காரணமாகும்.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டுப் பாதிப்படைந்த இந்த மக்கள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுகிறார்கள். இவர்கள் பழிவாங்கலை நாடவில்லை. மாறாக, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மீள் நிகழாமை மற்றும் தொடரும் மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை உறுதிசெய்யுமாறே வேண்டுகின்றனர். அவர்கள் உண்மை நிலைநாட்டப்படவேண்டும் எனக் கோருகின்றனர்.

சொந்த மக்களது இறையாண்மை மதிக்கப்பட்டு அவர்கள் சுய மரியாதை மற்றும் கௌரவம், சமத்துவம் மற்றும் நீதி மேலும் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றபோதுதான் ஒரு நாட்டின் இறையாண்மை புனிதத்துவம் பெறுகின்றது என்ற சம்பந்தனின் கருத்து நியாயமானதே .

உலக அரசியலுக்குப் பலியாகும் உக்ரைன்

இந்தப் போருக்குத் தன்னிடம் நியாயமான காரணங்கள் இருப்பதாகக் கருதுகிறது ரஷ்யா

ஒரு போர் என்ன செய்யும்? குண்டுச் சத்தம் கேட்ட அடுத்த நிமிடத்திலிருந்தே இயல்பு வாழ்க்கை குலைந்துவிடும். கடைகள் அடைக்கப்பட்டு உணவுகள் கிடைக்காது. ஏ.டி.எம். இயந்திரங்கள் பணம் தராது. மின்சாரம் தடைப்படும். போக்குவரத்து நின்றுவிடும். சாலைகள் துண்டிக்கப்படும். வாசலைத் தாண்டி வெளியில் செல்வதே உயிருக்கு ஆபத்தான விடயமாகிவிடும். நோயாளிகள் மருத்துவமனைக்குச் செல்ல முடியாது. கர்ப்பிணிகளுக்கு பிரசவம் இனிய அனுபவமாக நிச்சயம் இருக்காது. நேற்றுவரை தன் வீட்டில் நிம்மதியாக வாழ்ந்த ஒருவரை, நிர்க்கதியான அகதியாக்கி அண்ட தேசத்தின்

வீதியில் நிறுத்திவிடும். ஒரு தேசத்தை, அதன் கட்டமைப்புகளைச் சிதைக்கும். மறுநிர்மாணம் செய்ய பல தலைமுறைகள் ஆகிவிடும்.

ஆனாலும் ஆட்சியாளர் களுக்குப் போர் சலிப்பதில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மிக மோசமாக உலகம் அணிபிரிந்து நிற்கும் போராக ரஷ்ய - உக்ரைன் போர் இருக்கிறது. பெப்ரவரி 24 அதிகாலை இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்ட ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், நாங்கள் உக்ரைனை ஆக்கிரமிக்க போர் தொடுக்கவில்லை. அந்த நாட்டை இராணுவமயத்திலிருந்து விடுவிக்கப்போகிறோம் என்று ஒரு விநோதமான காரணமும் சொன்னார்.

போர் தொடங்கியபிறகு நிமிட்தத்துக்கு நிமிடம் உலகம் மாறிக்கொண்டிருப்பதை உணர முடிந்தது. கிட்டத்தட்ட கடந்த இரண்டு மாதங்களாகவே உக்ரைனைச் சுற்றி மூன்று எல்லைகளிலும் படைகளைக் குவித்து ஆயத்தமாவி வந்தது ரஷ்யா. உக்ரைனுக்கு ஆதரவாக அண்டைநாடுகளில் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் படைகளைக் குவித்தன. ஆனால், போர் தொடங்கிய பிறகு அவர்களில் யாரும் உக்ரைனுக்கு ஆதரவாக வரவில்லை. உலகம் எங்களைக் கைவிட்டுவிட்டது என்று புலம்பினார் உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி. 18 முதல் 60 வயதுவரையுள்ள உக்ரைன் ஆண்கள் அனைவரையும் போரில் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொண்டது உக்ரைன் அரசு. முதியவர்கள் எங்கும் போக மறுத்து வீடுகளுக்குள் முடங்க, குழந்தைகளையும் பெண்களையும் அண்ட தேசங்களுக்குப் பாதுகாப்பாக அனுப்பிவிட்டுப் போர்ப் பயிற்சி எடுக்கிறார்கள் உக்ரைன் ஆண்கள்.

இரண்டு உலகப் போர்களில் ஐரோப்பா உருக்குலைந்ததைப் பார்த்திருக்காத இன்றைய தலைமுறையினர், ஐரோப்பாவில் நிகழும் இந்தப் போரைக் கண்டு அதிர்ந்து நிற்கின்றனர். போர் என்பது ஏதோ ஆபிரிக்க மற்றும் அரபு நாடுகளில் நாகரிகமற்ற மனிதர்கள் நிகழ்த்துவது என்பது அவர்களின் புரிதல். வெள்ளைத் தோலும் நீலக் கண்களும் கொண்ட சக ஐரோப்பியர்கள் அகதிகளாக வெளியேறுவது துயர் தருகிறது என்று புலம்புகிறார்கள். ஆபிரிக்க மற்றும் ஆசிய அகதிகளை ஏற்க மறுத்த ஐரோப்பிய நாடுகளுக்கு உக்ரைன் அகதிகளை ஏற்பதில் எந்தத் தயக்கமும் இல்லை. போலந்து நாட்டில் மட்டுமே பல இலட்சம் அகதிகள் குவிந்திருக்கிறார்கள். எப்போதும் இல்லாத நடைமுறையாக போப் பிரான்சிஸ் நேரடியாக ரஷ்யத் துதரகத்துக்குப் போய் தன் எதிர்ப்பைத் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறார். போர் என்றாலே அது அநீதியானது என்றாலும், ஐரோப்பாவில் போர் நிகழ்ந்தால் உலகம் சற்று அதிகமாகவே கவலைப்படுகிறது.

இந்தப் போருக்குத் தன்னிடம் நியாயமான காரணங்கள் இருப்பதாகக் கருதுகிறது ரஷ்யா. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா வட அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் என்ற கூட்டமைப்பை உருவாக்கியது. நேட்டோ எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இதில் அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற 12 நாடுகள் இணைந்தன. நேட்டோ கூட்டமைப்பில் இருக்கும் எந்த ஒரு நாட்டின் மீது அந்நியப் படையெடுப்பு நிகழ்ந்தாலும், மற்ற நாடுகள் படைகளை அனுப்பி உதவிசெய்யும். பேர்லின் சுவர் விழுந்து ஜேர்மனி ஒரே நாடாக மாறிய நேரத்தில், கிழக்கு ஐரோப்பாவில் இருக்கும் எந்த நாட்டையும் நேட்டோவில் சேர்க்க மாட்டோம் என்று அப்போதைய ரஷ்ய ஜனாதிபதி கோர்ப்சேவேடம் வாக்குறுதி கொடுத்தது அமெரிக்கா.

1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து சிதறியது. ரஷ்யா தனிநாடாகிவிட, இன்னும் 14 பகுதிகள் தனித்தனி நாடுகளாகின. உக்ரைனும் அதில் ஒன்று. ரஷ்யாவுக்கு ஏற்கனவே கொடுத்த வாக்குறுதியை மீறி இதில் பல நாடுகளை நேட்டோவில் சேர்த்தது அமெரிக்கா. ரஷ்யாவிலிருந்து பிரிந்த அண்டை நாடுகளான எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவை நேட்டோவில் இணைந்தன. போதாக்குறைக்கு உக்ரைனும் ஜோர்ஜியாவும் நேட்டோவில் சேர விரும்பின. இதனால், ரஷ்யாவைச் சுற்றியிருக்கும் எல்லா நாடுகளிலும் அமெரிக்கா தடம் பதித்ததுபோல ஆகிவிடும். இதை ரஷ்யா ரசிக்காததே பிரச்சினைக்குக் காரணம்.

சோவியத் யூனியன் உடைந்த பிறகும்கூட, அந்த நாடுகள் ரஷ்யாவுடன் பொதுநலவாய அமைப்பொன்றில் இணைந்திருந்தன. நேட்டோ துண்டிவைப் போட்டு அமெரிக்கா இங்கே மீள் படிக்க ஆரம்பித்தபிறகு அந்தக் கூட்டமைப்பு செயலிழந்துபோனது. தனிக்குடித்தனம் போகும் மருமகன்களுக்குப் புகுந்த வீடு பிடிக்காது அல்லவா? அந்த நிலையில்தான் ரஷ்யாவை இந்த நாடுகள் பலவும் அணுகின.

சோவியத் யூனியன் என்பது பல்வேறு இனக்குழுவினர் வாழும் பிரதேசங்களை இணைத்த பெரிய தேசமாக இருந்தது. ஜோசப் ஸ்டாலின் காலத்தில் மறு குடியேற்றம் என்ற பெயரில் ஒவ்வொரு பிரதேசத்திலும் வேற்று இனத்தவரும் குடியமர்த்தப்பட்டனர். இப்படி ரஷ்யர்கள் பல இடங்களிலும் வாழ்கின்றனர். உதாரணமாக, உக்ரைனில் வாழ்பவர்களிலேயே ஐந்தில் ஒரு பங்கு மக்கள் ரஷ்ய இனத்தினர். இவர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால், அதைக் காரணங்காட்டி ரஷ்யா அங்கே நுழைகிறது.

நேட்டோவில் இணைய ஜோர்ஜியா முயன்றபோது, அங்கிருக்கும் அப்கசியா, தெற்கு ஒசேட்டியா பகுதிகளில் ரஷ்யர்களுக்குப் பிரச்சினை ஏற்படுவதாகக் கூறி, படைகளை அனுப்பினார் புட்டின். மாலடோவா நாட்டில் டிரான்ஸ்னிஸ்டியா பகுதியில் இதேபோல் பிரச்சினை வந்து அங்கு ரஷ்யப் படைகள் நுழைந்தன. ஆர்மீனியா, அஜர்பைஜான் நாடுகளின் எல்லையில் பிரச்சினை வந்தபோதும் ரஷ்யா படைகளை அங்கு அனுப்பியது.

உக்ரைன் விடயத்தில் ரஷ்யாவுக்குக் கூடுதல் அக்கறை உண்டு. ரஷ்யாவுக்கு மிக நீண்ட கடல் பரப்பு இருந்தாலும், ஆண்டின் பல மாதங்கள் அவை பனியில் உறைந்தே இருக்கும். ஆகவே, போக்குவரத்துக்குக் கருங்கடல் பகுதியை நம்பியிருக்கிறது. கருங்கடலில் இருக்கும் உக்ரைன் நாட்டின் செவஸ்டபுல் துறைமுகத்தை நீண்டகாலக் குத்தகைக்கு எடுத்திருந்தது ரஷ்யா. ஐரோப்பிய நாடுகளுடனும் ஆசியாவுடனும் வர்த்தகம் செய்ய அந்தத் துறைமுகம் ரஷ்யாவுக்கு அவசியம். அதனாலேயே தனக்கு இனக்கமான அரசு அங்கிருப்பதை ரஷ்யா விரும்பியது. ஆனால், உக்ரைன் ஐரோப்பிய யூனியனிலும் நேட்டோவிலும் சேர முயன்றது. அப்படி நிகழ்ந்தால், செவஸ்டபுல் துறைமுகம் கைநழுவிப் போகும் என்பதை உணர்ந்த புட்டின், 2014ஆம் ஆண்டு உக்ரைனைத் தாக்கி, கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யாவுடன் இணைத்துக்கொண்டார். இந்த கிரிமியாவில்தான் செவஸ்டபுல் துறைமுகம் இருக்கிறது.

இதைத் தொடர்ந்து உக்ரைன் தனது பாதுகாப்புக்காக 2019இல் பிரிட்டனுடன் ஒப்பந்தம் போட்டது. உக்ரைனை ஒட்டிய கருங்கடல் பகுதியில் இரண்டு கடற்படைத் துறைமுகங்களை பிரிட்டன் உருவாக்கித் தருவதாக ஒப்பந்தம். இப்போது கருங்கடலில் பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் வருவதும் போவதுமாக இருக்கின்றன. இந்த எல்லாவற்றையும் ரஷ்யாவுக்கான ஆபத்தாக புட்டின் பார்த்தார். அதுவே போரில் வந்து முடிந்திருக்கிறது. இந்தப் போரின் மூலம் கருங்கடல் பிரதேசத்தில் தன் ஆதிக்கத்தையும் கிழக்கு உக்ரைனில் ரஷ்யப் படைகளையும் வலுவாக நிறுத்த முயல்கிறார் புட்டின்.

ரஷ்யாவின் மசகு என்னெய் மற்றும் இயற்கை எரிவாயுவைச் சார்ந்தே ஐரோப்பா இருக்கிறது. அதையும் தாண்டி, பல நாடுகள் விதிக்கும் பொருளாதாரத் தடைகளே ரஷ்யாவைப் பேச்சுவார்த்தை மேஜையை நோக்கி நகர்த்தியிருக்கின்றன. உக்ரைனுக்குக் குவியும் உதவிகளும் புட்டினை யோசிக்க வைத்திருக்கலாம். போரையும் நடத்திக்கொண்டு பேச்சுவார்த்தையும் நடத்தும் ரஷ்யாவின் வித்தியாசமான அணுகுமுறையை உலகம் பார்க்கிறது. கொரோனாவுக்குப் பிந்தைய பொருளாதாரச் சூழல் ஒரு போரைத் தாங்கும் நிலையில் இல்லை. அமைதி திரும்ப வேண்டும்.

ரஷ்யா சண்டையிடுவதை நிறுத்தினால், போர் இல்லாமல்போகும்; உக்ரைன் சண்டையிடுவதை நிறுத்தினால், உக்ரைனே இல்லாமல்போகும் என்பதுதான் இப்போதைய நிலை.

தவக்கால சிந்தனை

தீயோர் சாகவேண்டும் என்பது என் விருப்பம் அன்று;

அக்காலத்தில் இயேசு சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரிதண்டுபவர் ஒருவரைக் கண்டார். அவரிடம், என்னைப் பின்பற்றி வா என்றார். அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரிய விருந்து அளித்தார். வரிதண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள். பரிசேயர்களும் அவர்களைச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களும் முணுமுணுத்து இயேசுவின் சீடரிடம், வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்? என்று கேட்டனர்.

இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, நோயற்றவர்க்கு அல்ல, நோய்ற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன் என்றார்

செல்வம் அனைத்தையும் இழந்தாலும், இயேசு என்னும் மாபெரும் செல்வத்தை அவர் பெற்றுக்கொண்டார். கிறிஸ்துவே ஒப்பற்ற செல்வம், அவர் முன்பு மற்ற அனைத்தும் குப்பை என்னும் மனநிலை கொண்டிருந்தார். எனவே, மகிழ்ச்சியுடன் தனது அழைப்பைக் கொண்டாடினார். நம் வாழ்வின் செல்வம் எது? உலக செல்வமா, இன்பமா? அல்லது இயேசுவா? லேவியைப் போல அனைத்தையும் விட்டுவிட்டு, இயேசுவை ஏற்றுக்கொள்வோம்.

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலத்துக்கான இரண்டாம் மதிப்பீடு எதிர்வரும் 09இல்

தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் உள்ளிட்ட சில சட்டமூலங்கள் எதிர்வரும் வாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (03) நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றம் எதிர்வரும் 08ஆம் திகதிமுதல் 11ஆம் திகதிவரை கூடவுள்ளது. எதிர்வரும் 08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகவிருப்பதுடன், மு.ப. 11.00 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், மார்ச் 09ஆம் திகதி மு.ப. 11.00 மணிமுதல் பி.ப. 4.30 மணிவரை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டமூலம் (இரண்டாம் மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 08 மற்றும் 09ஆம் திகதிகளில் மு.ப. 10.00 மணிமுதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தினங்களில் பிற்பகல் 4.30 மணிமுதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பி.ப. 4.50 மணிமுதல்

பி.ப 5.30 மணிவரையான காலப்பகுதியில் முறையே ஆளும் கட்சி, எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை மீதான விவாதமும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் பி.ப. 12.30 மணிவரை வேலையொட்கள் நட்டாடு (திருத்தச்) சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் பின்னர் மதிய போசன இடைவேளையின்றி பி.ப. 12.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை நாட்டில் நிலவும் எரிசக்தி பிரச்சினை தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்துக்கு நேரம் ஒதுக்குவதற்கும் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அதேநேரம், எதிர்வரும் 11ஆம் திகதி மு.ப. 10.00 மணிமுதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மு.ப. 11.00 மணிமுதல் பிற்பகல் 3.00 மணிவரை மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரனவினால், முன்வைக்கப்பட்டுள்ள "60 வயதைத் தாண்டியவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்" தொடர்பான தனிநபர் பிரேரணையும், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டாரவினால் முன்வைக்கப்பட்டுள்ள "உள்நாட்டு விதை உற்பத்திச் செயன்முறையினை உயிர்ப்பூட்டுதல்" தொடர்பான தனிநபர் பிரேரணையும், நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்னவால் முன்வைக்கப்பட்ட "இலங்கையில் உளவியல் ஆலோசகர்களை/உளவியல் சிகிச்சையாளர்களை ஒழுங்குறுத்தல்" குறித்த தனிநபர் பிரேரணையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன்பின்னர் பி.ப. 3.00 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை காணி அபிவிருத்தித் (திருத்தச்) சட்டமூலத்தை (இரண்டாவது மதிப்பீடு) விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மனித உரிமைகள் பேரவையின் தலைவர் - ஜீ.எல்.பீரிஸ் சந்திப்பு

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மனித உரிமைகள் பேரவையின் தலைவரும் ஆர்ஜென்டினாவின் நிரந்தரப் பிரதிநிதியுமான ஃபெடரிகோ வில்கோலை ஜெனீவாவிலுள்ள பலாஸ் டெல் நேஷன்ஸில் சந்தித்தார். அவருடன் நீதி அமைச்சர் அலி சப்ரி, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நொரின்புள்ளே மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இணைந்திருந்தனர்.

புல்வெட்டும் இயந்திரத்திற்குள் சிக்கி கடற்படைச் சிப்பாய் ஒருவர் மரணம்

(வவுனியா நிருபர்)

புல்வெட்டும் இயந்திரத்திற்குள் சிக்கி கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் (03) வவுனியாவில் மரணமடைந்துள்ளார்.

பூனாவ இராணுவ முகாமில் புல்வெட்டும் இயந்திரம் மூலம் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது அதனுள் சிக்கி காயமடைந்த கடற்படைச் சிப்பாய் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலய கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி

(வவுனியா நிருபர்)

தொல்பொருள் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்டிருந்த வவுனியா, சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளுக்கு தேசிய மரபுரிமைகள் அருங்கலைகள் மற்றும் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயத்துக்கு நேற்று முன்தினம் (03) மாலை அமைச்சர் தலைமையிலான குழுவினர் விஜயம் செய்திருந்தனர்.

வவுனியா, சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலயம் கடந்த 1952ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களினால் வழிபாடு செய்யப்பட்டு வந்துள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள மலைப்பகுதியில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற்றூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டட இடிபாடுகள் என்பன காணப்படுகின்றன.

அத்துடன், ஆலயத்தின் புனர்நிர்மாண கட்டுமானப் பணிகள் இடம்பெற்றுவந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர் குறித்த ஆலயம் அமைந்திருந்த பகுதி தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான பகுதி என தெரிவித்து கட்டுமானப் பணிகளுக்கு தடையுத்தரவு பிறப்பித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் அப்பகுதி மக்கள் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு தெரியப்படுத்திருந்ததுடன், கடந்த காலங்களில் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குதிபீபனின் கோரிக்கைக்கமைய இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினர், மக்களின் கோரிக்கையினை கேட்டறிந்தனர்.

ஆலயத்தின் கட்டுமானப் பணிக்காக மாதிரி வரைபடத்தினை தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கி தொல்பொருட்களுக்கு சேதத்தினை ஏற்படுத்தாத வகையில், புனர்நிர்மான வேலைகளை முன்னெடுத்து ஆலய வழிபாடுகளை மேற்கொள்ள அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக 35 பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் பல்கலைக்கழக வேந்தர் - தலைசார் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நேற்று (04) இடம்பெற்றன. (படங்கள் - யாழ் நிருபர்);

இலங்கை - இந்திய முதல் டெஸ்ட் நேற்று ஆரம்பமானது

திமுத் கருணாரத்ன தலைமையிலான சற்றுமுன் இலங்கை அணிக்கும், ரோஹிட் சர்மா தலைமையிலான இந்திய அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நேற்று மொஹாலியில் ஆரம்பமானது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராக அணித் தலைவர் ரோஹிட் சர்மா மற்றும் மயங்க் அகர்வால் களமிறங்கிய நிலையில் ரோஹிட் சர்மா 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மற்றைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மயங்க் அகர்வால் 33 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்த நிலையில், பொறுப்புடன் ஆடிய ஹனுமா விஹாரி அரைச்சதம் கடந்து 58 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

தனது 100ஆவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய விராட் கோஹ்லி 45 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பின்னர் ஆடுகளம் நுழைந்த ஷ்ரேயாஸ் ஐயர் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நேற்றைய முதல் நாள் ஆட்டத்தின்போது பத்திரிகை அச்சுக்கு செல்லும் வரையில், 78 ஓவர்களை எதிர்கொண்ட இந்திய அணி 5 விக்கெட்டுகள் இழப்பிற்கு 315 ஓட்டங்களை பெற்றிருந்தது. இலங்கை அணியின் பந்துவீச்சில் லசித் எம்புல்தெனிய இரு விக்கெட்டுகளையும், லஹிரு குமார, டி சில்வா மற்றும் விஷ்வ

பெர்னாண்டோ ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தினர்.

குறித்த போட்டி இலங்கை அணிக்கு 300ஆவது டெஸ்ட் போட்டியாகவும் வரலாற்றில் இடம் பிடித்திருக்கிறது. இன்று போட்டியின் 2ஆவது நாள் ஆட்டம் தொடர்கிறது.

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்

Dialog

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முடியாவிட்டால் விமல் வெளியேறவேண்டும்

அமைச்சர் ரோஹித வலியுறுத்து

அமைச்சர் விமல் வீரவங்சவுக்கு அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முடியாவிட்டால் வெளியேற வேண்டுமென அமைச்சர் ரோஹித அபயகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமைச்சரவை அமைச்சினூடாக கிடைக்கும் சிறப்புரிமைகளை குறைபாடுகிறி அனுபவிக்கிறார்கள். சலுகைகளையும் அனுபவித்துக்கொண்டு பேசுவதற்கு கையில் ஒலிபெருக்கி கிடைத்துவிட்டால் தேவையற்ற கருத்துகளை முன்வைக்கிறார்கள்.

விமல் வீரவங்ச இவ்வாறு பல்வேறு இடங்களில் உரையாற்றியுள்ளார். 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர், நாட்டை இக்கட்டான சூழ்நிலைக்கு கொண்டுசென்றுவிட்டதாக மேடைகளில் தெரிவித்துவந்த விமல் வீரவங்ச, நாட்டை சரியான திசையில் கொண்டுசெல்வதற்காக அதே தலைவரை அவரின் மேடைகளில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இதற்கான அர்த்தம் என்னவென்று புரியவில்லை.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முடியாவிட்டால், வெளியேறலாம். பலவந்தமாக எம்முடன் வைத்துக்கொள்வதற்கான அவசியம் எமக்கு இல்லை.

இது இவ்வாறிருக்க, மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தொடர்பில் கருத்து வெளியிடப்படுகிறது. அஜித் நிவாட் கப்ரால் திடீரென அமைச்சரவைக் கூட்டங்களில் பங்குப்பற்றுவர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் விமல் வீரவங்ச எலி போன்று இருந்தார். அதன்போது கலந்துரையாட இருந்தது.

ஹரிமகவில் கதைப்பதற்கு பதிலாக அஜித் நிவாட் கப்ராலுடன் நேரடியாக பேசுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருந்தன. அதன்போது, கப்ராலிடம் தெளிவான கேள்விகளை முன்வைக்க இருந்தது. அந்தச் சந்தர்ப்பங்களில் அமைதியாக இருந்துவிட்டு, வெளியில் வந்து வீரர்களை போன்று செயற்படுகிறார்கள்.

எரிபொருள் வரிசை தொடர்பில் குறித்து எரிசக்தி அமைச்சே கவனம் செலுத்த வேண்டும். அந்த பிரச்சினையை தீர்ப்பதற்காகவே தனியான அமைச்சு என்றொன்று அமைக்கப்பட்டு அதற்கு அமைச்சரொருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டில் எரிபொருள் இல்லை என்றால் எதற்காக தனியான அமைச்சொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்பது புரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

04.03.2022 நாணய மாற்று வீதம்

இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	032 8418	038 8544
கனேடியன் டொலர்	044 1676	050 0277
சீன யுவான் (ரென்மின்பி)	2 7406	21 0056
யூரோ	107 8021	117 2552
ஜப்பான் யென்	0 6 75	0 6615
சிங்கப்பூர் டொலர்	034 4748	04 2 76
ஸ்ரேலிங் பவுன்	152 4084	160 8042
சுவிஸ் பிரான்ங்	103 4884	111 0750
ஐ.அ.டொலர்	087 4 7	1 1 8881

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	423 6682
குவைட்	குவைட் தினார்	554 71
ஓமான்	ஓமான் றியால்	412 6 77
கட்டார்	கட்டார் றியால்	44 206
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	42 63 8
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	43 7835

தத்துவம் தங்கராசு



மஹிந்த ராஜபக்ஷ சிங்கப்பூரின் லி குவான் யூ, கோட்டாபய மலேசியாவின் மஹதீர் முஹம்மத் என்று கடந்த ஜனாதிபதி தேர்தலில் மேடை மேடையாய் கூவினார் விமல்...

அதேபோல் சம்பிக்கவுடன் சேர்ந்து இஸ்லாமியர்களுக்கு எதிராக செயற்பட்டு பின்னர் ராஜபக்ஷக்களுடன் சங்கமித்தார் கம்மன்பில...

தோழர் வாசுதேவவும் முதலாளித்துவ சிந்தனைக்குள் தன்னை உட்படுத்திக்கொண்டு அமெரிக்க எதிர்ப்புவாதியாக தன்னை காட்டிக்கொண்டு ராஜபக்ஷமாரின் தூராந்திற்கு ஆடியவரே.

இப்போது நித்திரையிலிருந்து எழும்பியவர்கள்போல் மூவரும் பேசுவதை பார்த்தால் சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யமாட்டாராம்... அமைச்சரவை கூட்டத்திற்கு போகமாட்டாராம்... ஆனால், அமைச்சராக இருப்பாராம்... வாசு செய்தியாளர்களிடம் சொன்னதையும் கேட்கமுடிந்தது.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு ராஜபக்ஷமார் எவ்வளவுதூரம் பொறுப்புக்கூற வேண்டுமோ..அந்தளவு தூரம் மேற்படி மூன்று பேரும் பொறுப்புக்கூறவும் வேண்டும்...

கல்வியை மேம்படுத்தினால் எல்லாம் சரியாகிவிடும்!

சொல்கிறார் டாக்டர் நிஷான் ஜெமீல்

இயந்திர

(பிரபலமான ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை முதல்வரும், இளம் தொழில் முயற்சியாளருமான விசேட பொது குடும்பநல வைத்திய நிபுணர் டாக்டர் நிஷான் ஜெமீல் (MBBS DCH DFSRH DPD (Cardiff) MRCGP) தமிழன் நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வி)

உங்களை பற்றி அறிமுகம் செய்யுங்கள்?

நான் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்தவன். என்னுடைய தந்தை பிரபலமான விசேட மகப்பேற்று வைத்திய நிபுணராக இருந்த டாக்டர் ஜெமீல். 40 வருடங்களுக்கு மேலாக இந்தப் பிரதேசத்தில் வைத்திய சேவை செய்தவர் என்ற அடிப்படையில் மக்களிடம் நல்ல மதிப்பை பெற்றவராக இருக்கிறார். காரீமேல் பற்றிமா கல்லூரி, சென். தோமஸ் கல்லூரி மற்றும் கல்முனை லாஹிறா கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவனான நான் ருஹுனு பல்கலைக்கழகத்தில் மருத்துவ படிப்பை முடித்துக்கொண்ட நான், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும், காஸல் வீதி வைத்தியசாலையிலும், லேடி ரிட்லேவ வைத்தியசாலையிலும் பணியாற்றிவிட்டு மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்று அங்கு என்னுடைய படிப்பு முடிந்த பின்னர் ஏறக்குறைய 15 வருடங்கள் எனது சொந்த வைத்தியசாலையை லண்டனில் நடத்தி வந்தேன். அதன்பின்னர் கட்டார் ஹமாட் தேசிய வைத்தியசாலையில் விசேட மருத்துவ நிபுணர் வாய்ப்பொன்று கிட்டியது. ஏறக்குறைய 4, 5 வருடங்களாக இப்போதும் அங்கு பணியாற்றி வருகிறேன். எனது மகளும் இப்போது மருத்துவத்துறைக்கு தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள தயாராகி வருகிறார்.

ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையை உருவாக்கக் காரணம் என்ன?

1984 ஆம் ஆண்டு 'சென்றல் நேர்சிங் ஹோம்' எனும் பெயரில் உருவாக்கப்பட்ட மருத்துவ நிலையம் பின்னர் கிரஸண்ட் வைத்தியசாலை எனும் பெயரில் இயங்கி வந்தது.உண்ட 2018ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்பத்துடன் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை எனும் பெயர்மாற்றத்துடன் இன்று சிறப்பாக இயங்கி வருகிறது. அம்பாறை மாவட்டத்தின் முதல் தனியார் வைத்தியசாலையாக உருவாக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் இதுவரை பல்லாயிரக்கணக்காணவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். 37 வருடங்களாக கல்முனையில் இயங்கிவந்த இந்த வைத்தியசாலை இப்போது நாட்டின் நிலை சுருதியும், நோயாளர்களின் நன்மை சுருதியும் அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களில் சேவை நிலையங்களை விஸ்தரித்துள்ளதுடன், மாளிகைக்காடு சந்தியில் தன்னுடைய இரண்டாவது வைத்தியசாலையை அண்மையில் திறந்துவைத்துள்ளது.

வைத்தியர்கள் பல்வேறு துறைகளில் முதலீடுகளை செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஏன் தனியார் மருத்துவத்துறையை தெரிவுசெய்தீர்கள்? அதில் இலாபம் உழைக்கும் நோக்கமா?

என்னைப் பொறுத்தமட்டில் எனது வைத்தியசாலையை கட்டியெழுப்ப வேண்டும் எனும் எண்ணம் இருந்தது. அதனை செய்வதற்காக நிறைய முதலீடுகளை நான் முதலிட வேண்டியிருந்தது. நிறைய பேர் பணம் கிடைத்தால் வெளிநாட்டில் முதலீடு செய்வார்கள். தலைநகரில் வளவுகள், வீடுகள் வாங்கி விற்பனை செய்வார்கள். ஆனால், நான் என்னுடைய வைத்தியசாலையை கட்டியெழுப்பியுள்ளேன். நான் கட்டாரில் வியாபாரம் செய்யவில்லை. மாதாந்த சம்பளத்திற்கே பணியாற்றி வருகிறேன். என்னுடைய தாய்நாட்டுக்கு சேவையாற்றும் எண்ணம் எனக்கிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் நான் இங்குவந்து நிரந்தரமாக சேவையாற்ற எண்ணியுள்ளேன்.

வளவுகள், சொத்துகளை வாங்கிப்போட்டால் சில காலங்களில் அதன் மதிப்பு பல மடங்காக உயர்ந்திருக்கும். ஆனால், மருத்துவத்துறை முதலீடுகள் அப்படியல்ல. மருத்துவத்துறைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தேய்மானங்கள், பழுதடையும் தன்மைகளினால் பாரியளவு செலவுகள் பராமரிப்புக்கு மட்டுமே செலவாகும். தனியார் மருத்துவத்துறை பாரியளவிலான இலாபமீட்டும் தொழிலாக இருந்திருந்தால் இலங்கையில் எத்தனை ஆயிரம் டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்நேரம் தனியார் மருத்துவமனைகளை கட்டியெழுப்பியிருப்பார்கள். மக்கள் வெளியிலிருந்து தமிழ் திரைப்படங்களை பார்த்துவிட்டு கருத்துக் கூறுவதுபோன்று மிகப்பெரிய இலாபமீட்டும் தொழிலாக தனியார் வைத்தியசாலைகள் இல்லை. அதற்கான மனித உழைப்புக்கேற்ற வருமானம் கிடைப்பதில்லை. அதனால்தான் நிறையபேர் (மருத்துவத்துறை சார்ந்தவர்கள்) அதை விரும்பாமல் சொத்துகள், வளவுகள், காணிகளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அதில் கிடைக்கும் வருமானத்தில் சில வீதங்கள்தான் தனியார் மருத்துவத்துறையில் கிட்டுகின்றன. அத்தம திருட்திக்காக நாங்கள் கற்ற கல்வியை கொண்டு சேவையாற்றும் மனவியல்புடனையே இந்த பணியை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வைத்தியசாலைகளை முன்னெடுத்துச் செல்வதில் எனது மனைவிக்கு கூட உடன்பாடு இல்லை. இந்த முதலீடுகளை வேறு ஏதாவது துறையில் முதலீடு செய்யலாம் என்பதே என்னுடைய குடும்பத்தினரின் ஆலோசனையாக அமைந்துள்ளது.

மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு தடவை மட்டும் பாவித்தாலே அதன் சந்தை பெறுமானம் வெகுவாக குறைந்துவிடும். சில நேரங்களில் ஒரு இயந்திரத்தினால் வரும் வருமானத்தை விட பல மடங்கு அதன் பராமரிப்புக்கும், தேய்மானத்திற்கும் செலவாகி விடுகிறது. ஒரு சிறிய பாகத்தின் விலை ஆக உச்சமாக இருக்கும்.

பிறந்த ஊருக்கும் கற்ற கல்விக்கும் ஏதாவது ஒன்றை செய்யவேண்டும் என்ற நோக்கில் இதனை முன்னெடுத்து வருகிறேன். இதனை பார்க்கும் ஏனைய சகோதரர்களும் என்னை விட மேன்மையான சேவையை வழங்க முன்வருவார்கள். இதனால் மக்களுக்கு சிறந்த சிகிச்சைகள் கிடைக்கும் என்று நம்புகிறேன். எங்களது வைத்தியசாலையில் ஆல்ரகாரா எனும் காப்புறுதித் திட்டம் அடங்காமை இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன. அதன்மூலம் தகுதியானவர்கள் காப்புறுதியை பெற முடியும்.

உங்கள் வைத்தியசாலையின் விசேட தன்மையாக எதனை கருதுகிறீர்கள்?

தலைநகரில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு நிகராக சொகுசான இடமாக இந்த வைத்தியசாலையை உருவாக்கியுள்ளேன். எங்களிடமுள்ள விசேட உபகரணங்களைக்கொண்டு நெருக்கமான முறையில் நோயாளர்களை கவனிக்கும் தன்மையை உருவாக்கியுள்ளோம். இதற்காக திறமையும், அனுபவமும் வாய்ந்த தாதியர்களை நாங்கள் நியமித்துள்ளோம்.

மறைந்த டாக்டர் ஏ.எல்.எம்.ஜெமீலால் தொடங்கப்பட்டு கடந்த 37 ஆண்டுகளுக்கு முன்னர் செவிலியராக ஆரம்பித்து, 10,000இற்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுத்து, புதிய அம்மாக்கள் மற்றும் சேவைகளுடன் புதுப்பிக்கப்பட்டு, 35இற்கும் மேற்பட்ட சிறப்புகளுடன் சௌலிங் சேவைகள், லேப்ரஸ்கோபிக் அறுவை சிகிச்சைகள், கண் மருத்துவ அறுவை சிகிச்சைகள், பொது அறுவை சிகிச்சைகள், எலும்பியல், சிறுநீரகம், மகளிர் மற்றும் மகப்பேறு அறுவை சிகிச்சைகள் போன்றவையுடன் எண்டோஸ்கோபி, டிரெட்மில் அழுத்த சோதனை, எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ்ரே வசதிகள் உள்ள அம்பாறை மாவட்டத்தின் முதல் தனியார் வைத்தியசாலையான டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கிளை வைத்தியசாலையான சாய்ந்தமருது ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் பிரதேச சேவை வழங்கும் நிலையங்கள் என்பன சிறப்பாக இயங்கி வருகின்றன.

நாங்கள் வசதிறைந்த மக்கள் வாழும் பிரதேசத்தில் சேவையாற்றி வருவதனால் குறைந்த லைவில் உயர்தர சேவைகளை வழங்குவதை இலக்காகக்கொண்டுள்ளோம், தற்போது எங்களின் LSCS செலவு மூலதன விலையில் கிட்டத்தட்ட 1/3 ஆகும். நமது எதிர்காலத்தில் அர்த்தோஸ்கோபிக் அறுவை சிகிச்சைகள், ENT அறுவை சிகிச்சைகள், கேத் லேப், CT ஸ்கேன் வசதிகள் போன்றவற்றை நிறுவ தயாராகி வருகின்றோம். தலைநகருக்கு சென்று செய்யவேண்டிய சத்திர சிகிச்சைகளை எங்களின் வைத்தியசாலையிலேயே செய்வதற்கான வசதிகள் எங்களிடம் இருக்கின்றன. பல கோடி பெறுமதியான

நவீன மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் இருக்கின்றது. இதனைக் கொண்டு நாங்கள் மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை வழங்கி வருகிறோம்.

நீங்கள் பயணித்திருக்கும் நாடுகளுக்கும், இலங்கைக்கும் இடையிலான மருத்துவ நிதியான வேறுபாடுகள் பற்றி கூறுங்கள்.

இலங்கையில் மிகவும் தேர்ச்சிபெற்ற, திறமையான வைத்தியர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் இலங்கையில் இருக்கிறார்கள். நான் பார்த்தவகையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் வளப்பற்றாக்குறை காரணமாக செய்வதற்கு முடியாத நிலையிலுள்ள சத்திரசிகிச்சைகளை கூட மிக சாதாரணமாக செய்யும் திறமையுள்ள வைத்தியர்கள் இங்கிருக்கிறார்கள். அது மாத்திரமன்றி நன்கு தேர்ச்சிபெற்ற விசேட மகப்பேற்று வைத்திய நிபுணர்களும் இருக்கிறார்கள். பொதுநல வைத்திய நிபுணர்கள் இவையெல்லாவற்றையும் இலங்கையின் மருத்துவத்துறையின் பலமாக பார்க்கிறேன். அதுபோன்று மேற்கத்தைய நாடுகளில் கட்டுப்பாடுகள் நிறைய இருக்கின்றன. 15 வருடங்களுக்கு மேல் லண்டனில் பணியாற்றிய அனுபவத்திலுாடாக நான் கண்டது என்னவெனில், நவீன தொழில்நுட்பங்களைக்கொண்டு அவர்கள் எங்களை கண்காணித்துக்கொண்டிருப்பார்கள். நாம் பயன்படுத்தும் மருந்துகள் தொடர்பில் ஒரு தகவல் பேணப்படும்.

ஆனால், எமது நாட்டில் பயன்படுத்தும் மருந்துகள் உடனடியாக நோய்க்கு நிவாரணியாக இருக்கவேண்டும் என்று விரும்புவதனால் பக்கவிளைவுகள் பற்றி நாம் சிந்திப்பதில்லை. சில வைத்தியர்கள், நான் நல்ல வைத்தியர். எண்ணிம் வரும் நோயாளர்களுக்கு நான் திருப்தியான சிகிச்சையை வழங்கக்கூடியவன் என்ற பெயரை எடுக்கவேண்டும் என்பதற்காக பக்க விளைவுகள் ஈடிய மருந்துகள் பரிந்துரை செய்யப்படுகின்றனர். அதனால் சிறுநீரகம், ஈரல் போன்ற பல பாகங்கள் பாதிப்படைகின்றன. இதனைக் கட்டுப்படுத்தவே மேற்கத்தைய நாடுகளில் கட்டுப்பாடுகள் நிறைய இருக்கின்றன.

மேற்கத்தைய நாடுகளில் தொற்றாநோய்களான குருதியழுத்தம், நீரிழிவு, ஆஸ்துமா போன்ற நோயாளர்களையும் பதிவொன்றிலூடாக கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் தொடர்ச்சியான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எல்லாவற்றுக்கும் வைத்திய்ர்களைத்தான் பயன்படுத்தவேண்டும் என்றில்லை. தாதிய உத்தியோகத்தர்களே போதுமானவர்கள். இப்படியான செயற்பாடுகளினால் உடலுறுப்புகளுக்கு ஏதாவது பாதிப்பு வரப்போவதை அறிந்து ஆரம்ப நிலையிலேயே அதற்கான சிகிச்சைகள் நடைபெறுகின்றன. ஆனால், நமது நாட்டில் அப்படியான தொடர்ச்சியான கண்காணிப்பு நடைபெறுவதில்லை. நோயாளர்களும் தனது நோய்களை அவரதாக குணமாக்கவே விரும்புகிறார்கள். மேற்கத்தைய நாடுகளில் உள்ள மருத்துவர்கள் தங்களுக்கிடையிலான அறிவு பரிமாற்றலை சிறப்பாக செய்கிறார்கள். எமது நாட்டில் அது சாத்தியமானதாக தெரியவில்லை.

மேற்கத்தைய நாடுகளில் அறிவை விருத்திசெய்வதற்கான கலந்துரையாடல்கள், பயிற்சிநெறிகள் நடைபெறுகின்றன. ஆனால், இலங்கையில் அது மிகக் குறைவாக இருக்கிறது. எமது நாட்டிலுள்ள வைத்தியர்களும் நோய்தை ஒதுக்கி அறிவு பகிர்தலை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறந்த சேவையை மக்களுக்கு வழங்க முடியும்.

கிராமிய மற்றும் அபிவிருத்தியடைந்த பிரதேச மக்கள் சிகிச்சைகளுக்காக அந்த பிரதேசங்களை விட்டு தலைநகரை நோக்கி செல்வதனால் அவர்களுக்கு ஏற்படும் நன்மமாக அல்லது இலாபமாக எதை பார்க்கிறீர்கள்?

அந்த பிரதேச வைத்தியர்கள் மீதும், வைத்தியசாலைகள் மீதும் நம்பிக்கை இழந்தவர்களாக தலைநகருக்கு சென்று சிகிச்சை பெறுகிறார்கள். இதன்மூலம் சாதாரண செலவுகளை விட மூன்று மடங்கு செலவுகள் அந்த நோயாளிகளினால் தலைநகரிலுள்ள வைத்தியசாலைகளுக்கு வீணாக செலுத்தப்படுகிறது. மக்களின் நிலையறிந்து மிகக்குறைந்த அதாயத்தை மட்டுமே இலக்காகக்கொண்டு நாங்கள் செயற்படுகிறோம். அதுதான் மன நீதியும் கூட. மக்களின் அபிமானத்தையும், நம்பிக்கையும் பெற்றதனால் எங்களின் வைத்தியசாலையின் கிளை நிறுவனங்களை மக்களின் காலடிக்கே கொண்டுசென்றுள்ளோம்.

மாகாணங்களுக்கிடையில் ஒரு வைத்திய நிபுணர் சென்று சேவையாற்றுவதாக இருந்தால் அதில் பல பிரச்சினைகள் இருக்கிறது. அந்த மாகாணத்தில் வசிக்கும் வைத்திய நிபுணர்களின் ஒப்புதல்களும் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாக அறிகிறேன்.

இலங்கையின் இலவசக் கல்வியை பயின்று வைத்தியராக நீங்கள் தனது பட்த்தை பெற்றபின்னர் தாய்நாட்டுக்கு முழுமையாக சேவையாற்றாமல் வெளிநாட்டுக்கு சென்றது ஏன்? அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

மருத்துவப் படிப்பை முடித்துக்கொண்ட நான், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நரம்பு சம்பந்தமான பிரிவில் பணியாற்றினேன். எனது பாடசாலை காலத்திலிருந்தே நான் இலங்கைக்கு சேவையாற்றவே விரும்பினேன். இலங்கையின் கல்வி முறையின்படி மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான வர்களையே விசேடதுறை கல்விக்கு அனுமதிப்பார்கள். அந்த வாய்ப்பை நான் பெற தவறிவிட்டேன். பின்னர் காலத்தின் கனதியறிந்து வெளிநாட்டுக்கு உயர்கல்விக்காக சென்றேன். அங்கு அந்த வாய்ப்பு உடனடியாக கிடைப்பதில்லை. அதற்காக பல்வேறு படிமுறைகள் இருக்கின்றன. அதனை கடந்தே அந்த வாய்ப்பை பெறவேண்டியிருந்தது. அதற்கே 7-8 வருடங்கள் கடந்துவிட்டன. அதன் பின்னர் இலங்கைக்கு திரும்பினாலும் பல்வேறு தடைதாண்டல்கள் இருக்கின்றன. அதன் பின்னரே எமது எண்ணங்களை சாத்தியப்படுத்த முடியும்.

விசேட பொது குடும்பநல வைத்திய நிபுணராக நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

தொற்றாநோய்களான உயர் குருதியழுக்கம், நீரிழிவு, ஆஸ்துமா, சிறுபிடி (நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்) போன்ற துறைகளில் என்னுடைய உயர்கற்கைகளை பூர்த்திசெய்துள்ளேன். அதுமட்டுமின்றி சிறுபிள்ளை மருத்துவத்துறையிலும், தோல்நோய்கள் போன்ற துறைகளிலும் நான் தேர்ச்சி பெற்றுள்ளேன்.

பாலியல் நோய்கள் மற்றும் பாலியல் சிக்கல்கள் தொடர்பிலான துறையிலும் கற்கைநெறிகளை பூர்த்திசெய்துள்ளேன். என்னுடைய மருத்துவத்துறை அனுபவத்தில் 17 விசேட பிரிவுகளில் பணியாற்றிய அனுபவம் இருக்கிறது. அந்த அனுபவங்களைக்கொண்டு காது தொடர்பிலான பல்வேறு சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளதால் அர்த்தோஸ்கோபிக் அறுவை சிகிச்சை

உள்ள சில முக்கிய பாடசாலைகளை நான் நோக்கியதில் நிறைய கட்டப்பங்கள் வந்துள்ளன. ஆனால், தலைநகரிலுள்ள பாடசாலைகளை போன்று நீச்சல் தடாகம், உள்ளக விளையாட்டாங்கு, உடற்பயிற்சிக்கூடம் போன்ற எதுவுமில்லை. இதனால் உடல், உள ரீதியான ஆறுதல்கள் இல்லாமல் போகின்றது. இவற்றை ஏன் எங்களின் பிரதேச பாடசாலைகளில் உருவாக்க முடியாமல் உள்ளது என்று நான் சிந்தித்துள்ளேன். இதற்கு நிறைய முதலீடுகள் தேவையில்லை. ஒரு மைல் வீதி அபிவிருத்திக்கு செலவாகும் பணத்தை விட குறைவாகவே இந்தத் தேவைகளை நிவர்த்தி செய்ய பணம் செலவாகும்.

மேற்கத்தேய நாடுகளில் மாணவர்களுக்கு பாடசாலைகளிலிருந்தே விளையாட்டு, தொழில் வழிகாட்டல், மொழியாள்களை போன்றன பயிற்றுவிக்கப்படுகின்றன. அதனால் அவர்களினால் பாடசாலை காலம் முடிந்த பின்னர் இலகுவாக நேர்முகப்பரீட்சைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. எனது மகள் மேடைகளில் கூச்சமில்லாமல் பேசும் அளவுக்கு என்னால் பேச முடியாது. அதற்குக் காரணம் எமது நாட்டின் கல்வி முறையே. எதிர்கால சந்ததியினரின் நலன்கருதி கற்பித்தல் முறையில் மாற்றம் தேவைப்படுகிறது. ஏனைய நாடுகளில் இல்லாத வளங்கள் எம்மிடம் இருக்கின்றன. அதை நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

பாடசாலைகளுக்கு மாடிக்கட்டடங்கள் தேவைதான். அதனை விட தேவையாக இருப்பது மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவர தேவையான விடயங்கள். திறமையான ஆசிரியர்கள், பயிற்றுவிப்பளர்கள் இருக்கிறார்கள். ஆனால், வளங்கள் சரியாக வழங்கப்படவில்லை என்பதே இங்கிருக்கும் பிரச்சினை. நான் ஆரம்பக்கல்வி கற்றபோது இருந்த விடயங்கள் இப்போதும் இருக்கின்றன. அதில் மாற்றங்கள் அவசியமாக உணரப்படுகிறது. சரியான திட்டமிடல்களுடன் கூடிய செயட்பாட்டை முன்னெடுத்தால் எதிர்கால சந்ததி சுகதேகியாக, ஆரோக்கியமிக்கவர்களாக, நன்னடத்தை கொண்டவர்களாக, சுயகௌரவமிக்கவர்களாக உருவாகுவர்.

மருத்துவத்துறையையும் தாண்டி சமூகநல வேலைத்திட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறீர்களா?

எங்களின் சமூகநல திட்டத்தினூடாக 100 குடும்பங்களுக்கு மேல் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம், பிரதேச பாடசாலைகளுக்குத் தேவையான அத்திபாவசிய தேவைகளை சில பாடசாலைகளுக்கு செய்துகொடுத்திருக்கிறோம், தொற்றாநோய்கள், சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை செய்து வருகிறோம். சுகதேகியான சந்ததிகளை உருவாக்க விளையாட்டுத்துறைக்கு பங்களிப்பு செய்து வருகிறோம். சிலருக்கு வீடமைப்புத்தானம் உதவிகளை செய்து கொடுத்துளோம். மாணவர்களை கல்வியில் ஊக்கப்படுத்த அவர்களுக்கான மேம்பாட்டு உதவிகளை செய்து வருகிறோம்.

அரச வைத்தியசாலைகளுக்கு அருகில் நிறைய தனியார் வைத்தியசாலைகள் அல்லது பரிசோதனைக்கூடங்கள் உருவாகக் காரணம் என்ன?

சில பிரதேச வைத்தியசாலைகளில் இல்லாத வளங்கள் அருகில் இருக்கும் தனியார் வைத்தியசாலைகளில் இருக்கும். அதனால் அந்த நோயாளிக்குத் தேவையான சிகிச்சையை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். இல்லாதபோனால் அந்த நோயாளியை வேறு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக மாற்றவேண்டிய நிலை வரும். அது மட்டுமன்றி, விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருவதனால் அரச வைத்தியசாலைகளுக்கும் நன்மை கிடைக்கிறது – என்றார் .

நேர்கண்டவர் – நூருல் ஹுதா உமர்
மாளிகைக்காடு செய்தியாளர்

90 வயதிலும் துடிப்புடன் பணியாற்றும் சமூக சேவையாளர் சத்தார் முஹம்மது வசீர்

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மாத்தளை மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு இனமத வேறுபாடுகள் மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொதுநல சேவைகளில் ஈடுபட்டு விசேடமாக கல்வித்துறைக்கும் விசேட தேவைகளுக்குரிய குழந்தைகளுக்கும் தனது 90 வயதை தாண்டியும் இன்றும் துடிப்புடன் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வரும் மத்திய மாகாணத்தில் எழில் கொஞ்சும் மாத்தளை மண்ணில் பிறந்த அல்ஹாஜ் அப்துல் சத்தார் முஹம்மது வசீர் உடனான கலந்துரையாடல்.

கேள்வி: உங்களைப் பற்றி கூறுங்கள்.

பதில்: நான் 1932ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17ஆம் திகதி மாத்தளை மண்ணில் ஒரு வர்த்தக குடும்பத்தில் பிறந்தேன். நான் எனது கல்வியை மாத்தளை விஜய கல்லூரியில் ஆங்கில மொழிமூலம் தரம் 08 வரை கற்று அதன் பின்னர் மாத்தளை சாஹிறா கல்லூரியில் தரம் 09 தொடக்கம் கல்வி கற்றேன். அங்கும் ஆங்கில மொழிமூலமே கல்வி கற்றேன். விஜய கல்லூரியில் எனது ஆசான்களாகவும் அதிபர்களாகவும் இருந்த சிங்களவர்களிடமே கல்வி கற்றேன். நான் தரம் 09இல் மாத்தளை சாஹிறா கல்லூரியில் சேர்ந்தபோது அங்கு அதிபராக எனது மதிப்பிற்குரிய ஆசானும் அதிபருமான மத்தாயிடமே கல்வி கற்றேன். இந்த இரண்டு பாடசாலைகளிலும் கல்வி கற்கும்போது இப்பாடசாலைகளில் தமிழ், முஸ்லிம், பௌத்த, கிறஸ்தவ மாணவர்கள் அனைவரும் இனபாகுபாடுகள் இல்லாமல் ஒன்றாகவே கல்வி கற்றோம்.

கேள்வி: நீங்கள் கற்ற மாத்தளை விஜய கல்லூரி இன்றும் ஒரு சிங்கள மொழிமூல பாடசாலை. அன்று இன்று போல் இனவாதங்கள் இருந்ததா என்பது பற்றி கூறமுடியுமா?

பதில்: உண்மையிலேயே நான் பிறந்து தொடக்கம் கல்வி கற்றுத் தேறும் வரை பெரும்பான்மை சிங்கள மாணவர்களுடனே பழகினேன். எங்களுக்கு மத்தியில் இன, மத வேறுபாடுகள் இருக்கவில்லை. ஏழை, பணக்காரன் என்ற பேதமும் இருக்கவில்லை. நாம் கொண்டு செல்லும் சாப்பாட்டு பொதியை ஒன்றாக வைத்து உண்ணுவோம். விளையாட்டுத்துறையில் ஈடுபட்டோம். அன்று நான் கண்ட இன உறவு இன்றும் நாம் பழகும் பெரும்பான்மை மக்களிடையே இருக்கின்றது.

கேள்வி: தங்களின் குடும்பம் பற்றி கூறுங்கள்.

பதில்: எனக்கு ஆறு பிள்ளைகள். நான்கு பெண்கள் இரண்டு ஆண்கள். எல்லோரும் நன்றாக கற்றுத்தேர்ந்தவர்கள். எனது பெண் பிள்ளைகள் எவரும் தொழில் புரிவதற்கு ஆசைபடவும் இல்லை அவர்களை தொழில் செய்யும்படி நான் அதிகாரம் செலுத்தவுமில்லை. இந்த நான்கு பெண்களில் மூத்தப்பெண் பிள்ளையை ஒரு பொறியியலாளரையும் இரண்டாவது பெண் பிள்ளை ஒரு டாக்டரையும் ஏனைய இரண்டு பெண் பிள்ளைகள் இரண்டு வர்த்தகர்களையும் திருமணம் செய்திருக்கின்றார்கள். இரண்டு ஆண் பிள்ளைகளில் மூத்தவர் அவருக்கு 'சுவநிவச'யின் முழுப்பொறுப்பையும் கொடுத்து அதனை அவர் பராமரித்து வருகின்றார். இரண்டாவது ஆண் பிள்ளை மாத்தளை ஆதார வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர் (EMT). அவரும் தன்னுடைய பணிகள் மூலம் வைத்திய சேவையோடு சமூக சேவையும் இணைந்து செய்துக் கொண்டிருக்கின்றார். எனவே, என்னுடைய ஆறு குழந்தைகளும் இன்றும் எனது கட்டுக்கோப்புக்குள் இருந்து இறைவனுக்கு மாறாக எதையும் செய்யாமல் பொருத்தமான வழியில் நேர்த்தியான சேவைகளை செய்து வருகின்றார்கள். இதுவும் எனக்கு ஒரு ஆத்ம திருப்திதான்.

கேள்வி: பாடசாலை கல்வியை முடித்த பின் அரச தொழிலில் ஈடுபட்டீர்களா அல்லது தந்தையின் வர்த்தகத்துறையை தொடர்ந்தீர்களா?

பதில்: நான் பாடசாலை கல்வியை முடித்ததும் ஒரு கிராம சேவை அதிகாரியாக நியமனம் பெற்றேன். அதுவும் விசேடமாக இன்று மாத்தளை மாவட்ட உக்குவளை பிரதேச செயலகப் பிரிவின் சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் கலல்லபிட்டிய என்னும் சிங்கள கிராமத்துக்கு நியமிக்கப்பட்டேன். ஊரில் சுமார் 18 மாதங்கள் எனது சேவை தொடர்ந்து. அதன் பின்னர் என்னை மாத்தளை மாநகருக்கு இடமாற்றம் செய்தார்கள். எனது ஓய்வுபெறும் காலம்வரை மாத்தளை நகரிலேயே கிராம சேவை அதிகாரியாக பணியாற்றினேன்.

கேள்வி: அரச ஊழியராக இருந்து ஓய்வு பெற்ற நீங்கள் எவ்வாறு மாத்தளை மாநகரில் ஒரு பிரபல்யம் வாய்ந்த வர்த்தகராக, தோட்ட உரிமையாளராக, சமூக சேவையாளராக உருவாகினீர்கள்.

பதில்: நான் ஏற்கனவே கூறினேன், நான் பிறந்தது ஒரு வர்த்தகக் குடும்பமொன்றில். எனது தந்தையார் சத்தார்டீன் (Satharson) என்ற பெயரில் தனது வர்த்தகத்துறையை ஆரம்பித்திருந்தார். நான் அரச தொழிலில் இருந்து ஓய்வுபெறும்போது எனது தந்தையாரும் முதிய வயதை அடைந்த நிலையில் இருந்தார். அந்தநிலையில் தந்தையின் வர்த்தகத்துறையை பொறுப்பேற்க வேண்டிய ஓர் சூழல் எனக்கு ஏற்பட்டது. அன்று நான் தந்தையின் வர்த்தகத்தை வியாபிக்க செய்து தோட்டத் தொழில், கட்டித்தொழில் என பல்வகை தொழில்களில் எனது மூலதனத்தை செலுத்தினேன். அதில் நான் தோல்வி காணவில்லை. வெற்றியையே கண்டேன். இன்றும் எனது அந்த வெற்றி தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்கெல்லாம் மூலக் காரணம், எண்ணித்தில் ஒரு கொள்கை இருக்கின்றது. எண்ணப் பெற்ற பெற்றோரையும் கல்விக் கற்றுத்தந்த ஆசானையும் இன்றும் நான் மதித்து நடக்கின்றேன். இறைவனின் உதவியும் அருளும் பெற்றார்கள், ஆசான்களின் ஆசீர்வாதமும் என்னை உச்சநிலைக்கு கொண்டு சென்றுக்கொண்டிருக்கின்றது.

கேள்வி: மாத்தளை மண்ணில் புகழ்பூத்த வர்த்தகக் குடும்பத்தில் பிறந்த தாங்கள் ஏன் உங்கள் கல்வியை தொடர்ந்து செல்லாமல் அரசத்துறையையும் தகுதி மின்னால் தந்தையின் வர்த்தகத்துறையையும் தெரிவு செய்தீர்கள்.

பதில்: உண்மையிலேயே கல்வி கற்க வேண்டும் என்ற நிறைந்த ஆசை எனக்கு இருந்தது. எனது சிறுபராயம் தொடக்கம் வாசிப்பதை மிகவும் நேசமாகக் கருதினேன். தமிழ், சிங்கள, ஆங்கில மொழி புத்தகங்களையும் நாளிதழ்களையும் தேடித்தேடி வாசிப்பேன். எனது நோக்கமே வாசிப்பின் மூலம் கல்வியின் உச்சக்கட்டத்துக்கு செல்ல வேண்டும் என்பதுதான். என்றாலும் என்னால் அதை தொடர முடியாமல் எனது கண்களால் எதையும் தொடர்ந்து வாசித்துக்கொள்ள முடியாமல், கண்கள் மற்றும் தலை பெரும் வலியை ஏற்படுத்தியது. இதனால் எனது கல்வியை இடைநிறுத்தி அரசத்தொழிலில் ஈடுபடவேண்டி ஏற்பட்டது.

கேள்வி: உங்கள் சமூக சேவை பற்றி கூறுங்கள்.

பதில்: எமது மார்க்கமும் எமது இறைத்தூதரும் கூறும் ஒரு சிறிய உதாரணம்– உணவு வலது கரத்தால் செய்யும் நல்ல காரியங்கள் இடது கரத்துக்கு தெரியாமல் செய்துகொள். அதுவே உனது நற்காரியங்களுக்கு நல்ல பலாபலன். அதைத்தான் நான் தொடர்ந்து செய்து வருகின்றேன்.

கேள்வி: உங்களுக்குரிய காணிகளில் பல ஏழை எளிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள காணிகளை அன்பளிப்புச் செய்துள்ளதாக கேள்விப்பட்டேன். இதைப்பற்றி கூற முடியுமா?

பதில்: நான் வர்த்தகத்துறையில் ஈடுபட்டு கொள்வனவு செய்த பல தோட்டங்கள், காணிகள் இருக்கின்றன. எனது மனைவியுடன் முதலாவது புனித ஹஜ்ஜிக்கு ஆயத்தமாகும் போது எனது மனைவியாரை தேடிவந்த ஓர் பெண்மணி தனக்கு ஒரு இல்லத்தை அமைத்து தருமாறு வேண்டிக்கொண்டதற்கிணங்க, ஹஜ் பயணத்துக்கு முன்பதாகவே குறிப்பிட்ட பெண்மணி உட்பட மொத்தம் 18 குடும்பத்தினருக்கு காணிகளை அன்பளிப்புச் செய்தேன். அதைத் தொடர்ந்து தேசிய மீளாத் விழா மாத்தளை நகரில் கொண்டாடப்பட்ட போது, முன்னாள் இஸ்லாமிய கலாசார இராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.அஸ்வரின் வேண்டுகோளுக்கிணங்க, மாத்தளை நகருக்கு அண்மையில் சுமார் இரண்டரை ஏக்கர் நிலத்தை வழங்கி மீளாத் கிராமம் என பெயர் சூட்டி வழங்கி வைத்தேன். இன்றும் அதில் தொடர்ச்சியாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை பார்க்கும் போது எனக்கு உண்மையிலேயே மனஎழுச்சி ஏற்படுகின்றது. இதை நான் யாருக்கும் பரைசாற்றிக் கொள்ளாமல் வழங்கி வந்தேன். இன்றும் எனது சமூகப் பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

கேள்வி: உங்கள் தோட்டத்துறைகளை பற்றிக் கூறுங்களேன்.

பதில்: மாத்தளை மாவட்டத்தில் பிட்டக்கந்த, கந்தேநுவர, சுதுகங்க போன்ற பகுதிகளில் எனக்கென தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. சுமார் நான்கு ஐந்து தளப்தங்களாக அந்த தோட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தொழிலாளர்களாக இருந்து வருகின்றார்கள். நான் இந்த தோட்டங்களை கொள்வனவு செய்தலும் முதலில் இந்த தோட்டங்களில் இருக்கும் லயன் குடியிருப்புகளை அந்த தொழிலாளர்களுக்கே சொந்தமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து இப்போது அவர்களுக்கான உறுதியை (Deed) வழங்குவதற்கான கடைசி கட்டத்தில் இருக்கின்றது. நான் இவ்வாறு செய்வதற்கு மூல காரணம், நான் இந்த தோட்டங்களை கொள்வனவு செய்த போது மேற்படி தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக இங்கே தொழில் புரிந்தவர்கள். இந்த குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கி கொடுக்க வேண்டும் என்பதே எனது விருப்பம் அதுவே இறைவனின் விருப்பமுமாகும்.

இதற்கு முக்கிய காரணமும் உண்டு. நான் உயிருடன் இருக்கும்போதே அவர்களுக்கான காணி உறுதிகளை வழங்க வேண்டும் என்பதே எனது ஆசை. ஏனென்றால், நான் இல்லாத காலத்திலும் இந்த அப்பாவி தொழிலாளர்கள் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாக வாழ வேண்டும். அவர்களுக்கு எவராலும் பிரச்சினைகள் ஏற்படக்கூடாது. விசேடமாக மேற்படி தோட்டங்களில் பாரம்பரிய இந்து ஆலயங்களும் பௌத்த, இஸ்லாமிய வணக்கஸ்தலங்களும் இருக்கின்றன. இவைகளில் எந்தவொரு மாற்றத்தையும் நான் ஏற்படுத்தவில்லை. இந்து, பௌத்த, இஸ்லாமிய வணக்கஸ்தலங்களை சூழவுள்ள காணிகளை அந்தந்த வணக்கஸ்தலங்களை அபிவிருத்திக்காக

வேண்டி சொந்தமாகவே வழங்கிவிட்டேன். அவரவர்கள் அவரவர்களுடைய வணக்க வழிபாடுகளை சுதந்திரமாக பின்பற்றலாம். ஏனென்றால் இந்த நாடு ஒரு சுதந்திரமான நாடு. அவரவர்களுடைய மத வழிபாடுகளை தங்குதடையின்றி செய்வதற்கு தோட்ட உரிமையாளர் என்ற அடிப்படையில் நான் தடையாக இருக்கக்கூடாது. எனது இந்த ஒவ்வொரு நடவடிக்கையையும் எனது பிள்ளைகளும் பின்பற்ற வேண்டும் என்பதே எனது ஆணித்தரமான அவாவாகும்.

கேள்வி: தாங்கள் கிராம சேவை அதிகாரியாக பணிபுரிந்து கிடைக்கப்பக்கூடிய ஓய்வூதியப்பணம் சில பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காகவும் மதவழிபாட்டு தலங்களுக்காகவும் வழங்கப்படுவதாக அறிகின்றேன். இதைப்பற்றி கூற முடியுமா?

பதில்: ஆரம்பத்தில் இந்த ஓய்வூதிய பணம் மாத்தளை சாஹிறா தேசிய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் விசேட வகுப்புகளுக்காக வழங்கி வந்தேன். பின்னொரு காலத்தில் இந்த வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டதும் மேற்படி ஓய்வூதிய நிதியை பிட்டகந்த, கந்தேநுவர, சுதுகங்க போன்ற பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களுக்கும், இப்பகுதியில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் விசேட தேவைகளுக்குரிய குழந்தைகள் இருப்பதாக கேள்விப்பட்டு அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காகவும் அவர்களுடைய போசனை வளர்ச்சிக்காகவும் மேற்படி ஓய்வூதிய நிதியுடன் மேலும் பல நிதிகளை சேர்த்து கையளித்து வருகின்றேன். இந்தப்பணி இப்பொழுதும் தொடர்ந்து வருகின்றது.

கேள்வி: மாத்தளை நகரில் தனியார் மருத்துவ நிலையமொன்றை உருவாக்கி உள்ளீர்கள். வைத்தியத்துறைக்கே சம்பந்தமில்லாத தாங்கள் இவ்வாறான ஒரு நிலையத்தை உருவாக்க முக்கியமான காரணம் என்ன?

பதில்: மாத்தளை ராஜ வீதியில் நில அளவையாளர் சகோதரர் மாடசாமிக்கு சொந்தமான கட்டிடம் விற்பனை செய்யப்படவுள்ளதாக கேள்வியுற்று அவரை அணுகியதும் மேற்படி காணியை எனக்கு வழங்குமாறு வேண்டியதற்கு இணங்க, அவரும் மனம் சளிக்காது காணியை எனக்கு கையளித்தார். அந்த காணியில் நீர்கள் கூறியது போன்று சகல இன மக்களுக்கும் வசதியான ஒரு மருத்துவ சேவை நிலையம் உருவாக வேண்டும் என எண்ணி அதற்கான நிர்மாணப் பணிகளையும் பூர்த்தி செய்தேன். இதற்கு எல்லா இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பொது பெயர் தேவைப்பட்டது. பல தமிழ், சிங்கள, முஸ்லிம் பெரியார்களின் ஆலோசனையின் பெயரிட்டேன். 'சுவநிவச' (Suwaniwasa) என பெயரிட்டேன். மாத்தளை ஆதார வைத்தியசாலைக்கு வரக்கூடிய சகல விசேட வைத்திய நிபுணர்களும் மற்றும் ஆதார வைத்தியசாலையில் பணிபுரியக் கூடிய இதர வைத்திய நிபுணர்களும் இந்த சுவநிவசயில் தமது சேவையினை வழங்கி வருகின்றார்கள். இதில் சுமார் 40 பேர் வரை சேவை புரிகின்றார்கள். விசேடமாக தமிழ், சிங்கள ஊழியர்களே அதிகம். இதிலொரு மனத்திருப்தி என்னவென்றால், இறைவனின் கிருபையால் இறைவன் எனக்கு வழங்கிய சொத்துகள், பணம் முதலியவற்றால் பல குடும்பங்கள் அவர்களின் நாளாந்த வாழ்வாதாரத்தை நிறைவு செய்து கொள்கின்றார்களே! இதை நினைக்கும் போது எனக்குள்ளே ஒரு ஆத்ம திருப்தி ஏற்படுகின்றது. இந்த ஆத்ம திருப்தி எனது வாழ்நாளிலும் எனது மரணத்துக்கு பின்னாலும் இருக்க வேண்டும். அது எனது குழந்தைகள் உட்பட குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பதே எனது அவா.

கேள்வி: இவ்வளவு எல்லாம் சமூகப்பணி, கல்விப்பணி, சுகாதாரப்பணி, கலாசாரப்பணி என பலவிதமான சமூக சேவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் தாங்களுக்கு ஏதேனும் பட்டங்கள் இதுவரை கிடைக்கவில்லையா? அதற்கான முயற்சிகளில் தாங்கள் ஈடுபடவும் இல்லையா?

பதில்: ஒரு முதுமொழியை தாங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன். ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டாலும் அமைதியாகவே இருக்கும். கோழி ஒரு முட்டையை இட்டுவிட்டு கொக்கரித்து ஊரையே கெடுத்துவிடும். இதை தாங்கள் நன்றாக புரிந்திருப்பீர்கள் என நினைக்கின்றேன். என்னைப் பொறுத்தவரையில் பணம் செலவழித்து பதவியை தேடி செல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. பதவிகளை நாம் தேடிச்செல்லக் கூடாது பதவிகள் எம்மை தேடி வர வேண்டும். பொருத்தமாக இருந்தால் அதை ஏற்று அலங்கரித்துக் கொள்ளலாம். இல்லையென்றால், அதை நிராகரித்து விடலாம். இன்று பட்டமும் பதவியும் என்பது ஒரு சிலருக்கு விளம்பரம். என்னைப் பொறுத்தவரையில் நான் செய்துகொண்டிருக்கக் கூடிய சமூக பணிகளுக்கு எந்த பெயர் பலகைகளோ கல்வெட்டுகளோ விளம்பரமோ தேவையில்லை.

கேள்வி: மாத்தளை மண்ணில் ஒரு சிறந்த சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய தாங்கள் இன்றைய எமது சமூகத்துக்கும் நாட்டு மக்களுக்கும் சொல்லும் செய்தி என்ன?

பதில்: நான் படித்தது தொழில் புரிந்தது வர்த்தகத்துறையில் ஈடுபட்டது என எல்லாம் பெரும்பான்மை சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களோடு தான். நான் கல்விக்கும் காலத்தில் சிங்கள ஆசான்களிடம், சிங்கள மாணவர்களுடன் கல்வித்துறையில் ஈடுபட்டபோதெல்லாம் இனவாதம் என்ற ஒன்று இருக்கவில்லை. இன்று தலையை தொட்டால் இனவாதம்; கையை நீட்டினால் இனவாதம்: கால்களை நகர்த்தினால் இனவாதம். இனவாதம் ஒங்கி சமூகங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டுள்ள இக்காலகட்டத்தில் நாம் ஒருவரை ஒருவர் புரிந்து இதர இனங்களுக்கும் மதங்களுக்கும் மதிப்பளித்து விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்ந்தால் இந்நாட்டில் எமக்கு நீண்ட பயணத்தை கொண்டு செல்ல முடியும். இதுவரை காலமும் நாம் அதையே தொடர்ந்தோம், இனிமேலும் அதுனையே தொடர வேண்டும். நாட்டில் ஆட்சிகள் வரலாம் மாறலாம். இந்த ஆட்சிகள் என்றும் நிலையானவை அல்ல. எனவே நாட்டில் சகோதரத்துவமும் சமத்துவமும் என்றும் நிலையானது. இந்த மூல மந்திரத்தை புரிந்து நாம் செயற்படுவோமேயானால், எமது வாழ்வில் எந்தவிதமான தாழ்வும் ஏற்படாது என்பதை எமது சமூகங்கள் உணர வேண்டும். இதுவே எனது ஆசை.

நேர்காணல்: எம்.எஸ்.எம். மசாஹிம் மாத்தளை நிருபர் (பண்ணாமத்து மாணி)

பேருவளையில் நவீன வசதிகளுடன் Futsal விளையாட்டரங்கு; பல்வகை உணவகமும் திறப்பு

பி.எம்.முக்தார்
பேருவளை

பேருவளை, காலி வீதி ஹெட்டிமுல்ல சந்தியில் நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள புட்சல் (Futsal) விளையாட்டுத் திடல் மற்றும் பேர்கோ சிட்டி (Burgo City) பல்வகை உணவகம் உள்ளடங்கிய உல்லாசபுரி 05.03.2022 மாலை 4.00 மணிக்கு இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வாவினால் வைபவரீதியாக திறந்து வைக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பேருவளை நகரபிதா மஸாஹிம் முஹம்மத் மற்றும் பிரதேச அரசியல் பிரமுகர்கள் பிரதேச, மாவட்ட, மாகாண முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பேருவளை நேர்தல் தொகுதியிலுள்ள தர்கா நகரை பிறப்பிடமாகக் கொண்ட பிரபல தொழிலதிபரும் சமூகநலன் விரும்பியுமான பாஹிம் தாலிப்பின் உழைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

பேர்கோ சிட்டி 'Burgo City' என்ற பெயரில் அமையப்பெற்றுள்ள இவ் வேலைத்திட்டம் சுமார் 67 பேர்ச் நிலப்பரப்பில் சுமார் 26 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இன்று கம்பீரமாக அழகாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

பாஹிம் தாலிப் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய இராச்சியத்தின் அரசுடன் சேர்ந்து பலதரப்பட்ட வியாபாரங்களை உருவாக்கி நூற்றுக்கும் மேட்பட்ட அந்நாட்டு வெள்ளையர்களுக்கும் வேலைவாய்ப்புகளை கொடுத்துள்ளார். தான் பெற்ற நீண்டகால அனுபவங்களினாலேயே மேற்படி திட்டத்தை முன்னெடுத்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் எங்கும் காணப்படாத வகையில் ஒரே இடத்தில பல்வகையான விளையாட்டுகளும் அதனை ஒட்டிய நிலையில் பலதரப்பட்ட உணவுகளை உள்ளடக்கிய உல்லாச உணவகமும் அமையப் பெற்றுள்ளன. மாவட்டம், மாகாணத்தில் மட்டும் அல்லாது இலங்கைத் தீவிலேயே இத்தகைய திட்டமொன்று அங்குராற்பணம் செய்யப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

பூர்வீக வரளாறு படைத்த பேருவளை பிரதேசம் இதன்மூலம் மேலும் புகழ் பெரும் என்பதை எதிர்பார்க்கலாம்.

இது இப்பிரதேசத்திற்கு புகழ் சேர்ப்பதுடன் நின்றுவிடாது இப்பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகள் பலருக்கும் இதன்மூலம் தொழில் வாய்ப்பையும் பெற்றுத் தருவதாகவும் அமைந்துள்ளது.

இத்திடலில் தலைநகரின் முன்னோடி நட்சத்திர ஹோட்டலில் பணிபுரிந்து அனுபவம் பெற்ற 45 இளைஞர், யுவதிகள் வேலை செய்து வருகின்றனர். இதில் 22 பேர் இதே பிரதேசத்தைச் சேர்த்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்திலுள்ள மூவினங்களையும் சேர்ந்த (தமிழ், முஸ்லிம், சிங்களம்) வாலிப, யுவதிகளே தற்போது இங்கு பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதன் மூலம் இன, ஐக்கியம் நல்லிணக்கத்திற்கு ஒரு முன்மாதிரியாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகவுள்ளது.

தொழிலதிபர் பாஹிம் தாலிப் பேட்டி

Q. களுத்துறை மாவட்டத்திலேயே முதலாவது உயர்தர நட்சத்திர ஹோட்டலாக அமையும் என்கிறீர்களா?

ஆம். இது மட்டுமல்ல. எனது புட்சல் விளையாட்டுத்திடலும் களுத்துறை மாவட்டத்தில் மட்டுமல்ல, இலங்கை நாட்டிலேயே எங்கும் அமையப்பெறாத மிகவும் பாரியளவிலான கருத்திட்டமாக உள்ளது.

Q. மேற்படி கருத்திட்டங்கள் உங்கள் உள்ளத்தில் உருவெடுக்க காரணியாக அமைந்த பின்னணி என்ன?

நான் ஐக்கிய இராச்சியத்தில் லண்டன் நகரில் சுமார் 22 வருடங்களாக பலதரப்பட்ட வியாபாரங்கள் செய்து வந்துள்ளேன். அதில் சுமார் 17 வருடங்கள் மாற்று திறனாளிகளுக்கான போக்குவரத்து சேவையை ஐக்கிய இராச்சியத்தின் அரசாங்கத்துக்கு வழங்கும் நிறுவனத்தை நடத்தி அதில் பல தேச மக்களுக்கும் வேலைவாய்ப்பை கொடுத்துள்ளேன். அத்தகைய என்னுடைய வியாபார அனுபவங்களை வைத்து இலங்கையிலும் நிறுவனமொன்றை ஆரம்பித்து பல பேருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையை எனக்குள் தூண்டியது.

Q. நீண்டகாலம் அங்கு வாழ்ந்த நீங்கள் ஐக்கிய இராச்சியத்தின் பிரஜாவுரிமை பெற்றுள்ளீர்களா?

ஆம். அந்நாட்டின் பிரஜாவுரிமை பெற்று இலங்கைப் பிரஜையாகவும் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றுள்ளேன். எனது மனைவி, நான்கு பிள்ளைகளும் இவ்வாறே இரட்டைப் பிரஜாவுரிமையுடன் வாழ்கிறோம்.

Q. இலங்கையில் உங்கள் வசிப்பிடம் எங்குள்ளது?

தர்ஹாநகரில் பிறந்த நான், தற்போது தெஹிவளையையே வசிப்பிடமாக்கியுள்ளேன்.

Q. இவ்வளவும் கூறியும் நீங்கள். உங்கள் வாழ்க்கைச் சுருக்கத்தை கூறவில்லையே?

தர்ஹாநகரில் பேரும் புகழும் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்த மர்ஹூம்களான தாலிப் மரிக்கார் - ஹூர்த்மூல் ஜன்னா தம்பதிகளின் புதல்வனாக 1968ஆம் ஆண்டு பிறந்தேன். ஆரம்பக் கல்வியை அல்ஹம்ரா கல்லூரியில் பெற்றேன். பின்னர் தர்ஹாநகர் ஸாஹிரா கல்லூரியில் இணைந்து க.பொ.த. சாதாரண தரம் வரை படித்தேன்.

மனநல உடல்நல குறைபாடுகள் உள்ள பிள்ளைகளின் போக்குவரத்தை அரசாங்கத்துக்கு வழங்கி அதிலும் எல்லா நிறுவனங்களை விடவும் பெரிய நிறுவனமாக உயர்ந்தேன். அல்ஹம்துலில்லாஹ்.

அதனைத் தொடர்ந்து தந்தை ஈடுபட்டுவந்த வர்த்தகத் தொழிலில் கைவைக்காது சுயமாகவே தொழில் ஒன்றில் ஈடுபட வேண்டும் என்ற இலட்சியத்துடன் 1987இல் ஜப்பான் நாட்டுக்கு பயணமானேன். ஐந்து வருட உழைப்பின் பின் நாடுதிரும்பி கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த பெண்ணைக் கரம்பிடித்து திருமண பந்தத்தில் இணைந்தேன்.

தொடர்ந்து வாழ்க்கையில் பல சவால்களுக்கும் முகம்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். பல இழப்புகளையும் சந்தித்தேன். தோல்வியின் விளிம்புக்கே சென்று பெரும் கடனாளியான நிலையில் மீண்டும் ஜப்பான் சென்று உழைத்து நிவாரணம் பெற்று, குடும்பத்தோடு ஐக்கிய இராச்சியம் சென்று மாற்றுத்திறனாளி, மனநலக் குறைபாடுகள் உள்ள பிள்ளைகளைப் பராமரிப்பதில் கைதேர்ந்தேன். இன்பம், துன்பம் ஆகிய சந்தர்ப்பங்களில் எல்லாம் என் மனைவியே மீண்டெழ உறுதுணையாக நின்றார். இன்னும் எனது வர்த்தக, தொழில் முயற்சிகளில் எல்லாம் பக்கபலமாக இருந்து கைகொடுத்துக்கொண்டிருக்கிறார்.

Q. உங்கள் பிள்ளைகளும் வெளிநாடுகளிலே வசிப்பதாகக் கூறினீர்கள். அவர்களின் நிலை என்ன?

மூத்த மகள் பல்கலைக்கழக பட்டதாரியான பின் எகிப்தில் சோனிஹமாக ஓர் உணவகம் நடத்திவருகிறார். இரண்டாவது மகள் அவரும் பல்கலைக்கழக பட்டதாரி. லண்டனிலுள்ள என்னுடைய நிறுவனத்தை என் இடத்திலிருந்து நடத்தி வருகிறார். இளைய மகன் பல்கலைக்கழகத்தில் கடைசி வருடம் படித்துக்கொண்டிருக்கிறார். இளைய மகள் 9ஆம் வருட மாணவி.

Q. நீங்கள் எழுத்துத்துறையிலும் ஈடுபாடு காட்டுகிறீர்களாமே?

2007 முதல் 2014 வரை இலங்கையில் வெளிவந்த 'நேர்வழி' மாத சஞ்சிகையை நடத்தி வந்துள்ளேன். தற்போது சமூக வலைத்தளத்தில், சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகளை எழுதி வருகின்றேன். அவற்றுக்கென்றும் பெரும்பாலான வாசக, நேயர்கள் உள்ளார்கள்.

Q. இவற்றுக்குப் புறம்பாக வேறு விசேட ஈடுபாடுகள் உண்டா?

நான், எனக்கு வசதி வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் சமூகநலத் தொண்டுகளில் ஈடுபடுவதுண்டு. இப்போதும் எனக்குக் கிடைக்கும் வருமானத்தில் 10 வீதத்தை ஒதுக்கி வருகிறேன். தேவையுடைய மக்களுக்கும் வசதிகுறைந்த மக்களுக்கும் வழங்கி, ஏழைகளின் துயர் துடைத்து வருகிறேன். நானும் பல கஷ்ட நஷ்டங்களுக்கு முகங்கொடுத்து முன்னேறியதால் கஷ்டப்படுவோருக்கு கைகொடுப்பதில் ஈடுபாடு காட்டவும் தவறமாட்டேன்.

Q. நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் சந்தர்ப்பங்களில் இங்குள்ள நிறுவனங்களைக் கவனிப்பது எப்படி?

என்னால் இயக்கப்படும் நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் நம்பிக்கையான முகாமையாளர்களை அமர்த்தியுள்ளேன். எனவே, அவர்கள் என்னைப் போன்றே தம் பணியிலை மேற்கொள்கிறார்கள் என்ற நம்பிக்கையுடனே எனது நிறுவனங்கள் எல்லாம் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

Q. வருங்கால சந்ததியினருக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். தொழில் மட்டுமல்ல, எல்லா முயற்சிகளின் போதும் கஷ்டம், நஷ்டம் வரலாம். எந்த சந்தர்ப்பத்திலும் முயற்சியைக் கைவிடக்கூடாது.

விரக்தியடைந்து சோர்ந்து போகக்கூடாது. பயணத்தைத் தொடர்ந்தால் வெற்றி இலக்கை அடையலாம். வெற்றியின் ஒருபகுதியை தர்மத்திற்காகவும் ஒதுக்கவேண்டும். அப்போதே முயற்சி மேலும் அபிவிருத்தியடையும். நான் அனுபவத்தில் கண்ட உண்மை இதுவாகும். இருகை சேவைபோல் துணைவியும் துணை நின்றால் மேலும் முன்னேற்றம் காணலாம்.

அதேபோன்று சங்கிலித் தொடரான பயன்பாடாகவும் இதன் பணிகள் வியாபிக்கவும் வழிவகுக்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டி ஓட்டுநர்களுக்கும் கடிய வேலைவாய்ப்புகள், வருமான உயர்வுகளும் ஏற்பட வழி பிறந்துள்ளதை பலரும் பாராட்டியுள்ளனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இப்பிரதேசத்தின் மாவட்ட இளம் வாலிப, யுவதிகள் தவறான வாழ்வை நாசமாக்கும் வீண் பொழுதுபோக்குகளில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்ற இன்றைய போராத்தான சூழ்நிலையை மாற்றி உள்ளத்திற்கும் உலுக்கும் சிறந்த ஆரோக்கியம் கிடைக்கும் சிறப்பான வாய்ப்புக்கு வழி பிறக்கிறது எனலாம்.

உரிமையாளர் பாஹிம் தாலிபும், வாலிபர்கள் தவறான திசையில் பயணிப்பதை திசை திரும்புவதை தடுப்பதை பிரதான நோக்காகக் கொண்டே இதனை நிர்மாணித்ததாகக் குறிப்பிடுகிறார்.

வாலிப பருவத்தினர் போதையின் பின்னால் வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இத்தகைய முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

இன்று திறந்துவைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடலில் கிரிக்கெட், பெட்மின்டன், பிலியட், உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம் போன்ற வாலிபர்களைக் கவர்ந்திழுக்கும் விளையாட்டுகளுக்காக வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோன்றே உணவகத்திலும்

நவீன உணவு வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

இங்கு ice burg எந்த பெயரில் desserts, gelato ice cream பலவகையான coffee மற்றும் குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. பேருவளையில் இவைபெல்லாம் ஓர் இடத்தில் கிடைப்பது மிகவும் ஆர்மையானதாக இருக்கிறது.

மூவேளை உணவுகள், இடைவேளை சிற்றுண்டி வகைகள் மற்றும் சுவைமிகு குளிர்பானங்கள், தயிர், யோகட் உள்ளிட்ட ஆரோக்கிய உணவுகள் என்பன தயார் செய்யப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. இது கொபி ஷொப் என்ற பெயரில் இயங்குகின்றது.

பேர்கர், பீஸா,அரேபிய உணவு, துருக்கி, இத்தாலி நாடுகளின் உணவுகள் கூட இங்கு தயாரிக்கப்படுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதால் அரசின் பீதூ சுமத்தப்பட்டுள்ள தொழில் வளங்கள் சுமையும் சற்று தளர்வு காணவும் வழிபிறக்கிறது.

ice burg dessert உணவகம் காலை 7.30 மணிக்கும் பிரதான உணவகம் பிற்பகல் 12 மணிக்கும் ஆரம்பிக்கப்பட்டு இரவு 2 வரை நடை பெறும். விளையாட்டு அரங்கங்கள் காலை 8 மணியிலிருந்து இரவு 2 மணி வரை நடை பெறும். றமழான் மாதங்களில் அதிகாலை 3 மணி வரை திறக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக சகல ஏற்பாடுகளும் இங்கு எப்போதும் தயார் நிலையில் உள்ளன. எதிர்காலத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு நட்சத்திர ஹோட்டல் அமைப்பிலான விடுதி வசதிகள், பல்வகை உணவுகளும் இங்கு பெற்றுக்கொள்ள முடியுமென்பதும் குறிப்பிடத்தக்கது.

இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த டி சில்வா

நாடாளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்



பேருவளை நகர பிதா மஸாஹிம் முகம்மட்

யாழில் மின்சாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மெழுகுவர்த்தி - டோர்ச் லைட் ஏந்திய போராட்டம்

(யாழ். நிருபர்)

மின்சாரத் தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மெழுகுவர்த்தி மற்றும் டோர்ச் லைட் ஏந்திய போராட்டமொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் - கண்டி பிரதான வீதியின் செம்மணி சந்தியில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தற்பொழுது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத் தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் போராட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன் மற்றும் கே.சயந்தன், யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த ஊடக மாணவிக்கு ஏகாந்த நிலையில் பட்டம்!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மாணவி ஒருவருக்கு ஏகாந்த நிலையில் பட்டமும், நினைவுத் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஊடகத்துறையில் சிறப்புக் கலைமாணி பட்டம் பெற்ற தில்கார்தி நவரட்ணம் பட்டமளிப்பு விழாவின்போது உயிருடன் இல்லாத நிலையில் அவருக்கான சிறப்புப் பட்டம் அவரது தாயாரிடம் வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சிக்காக வழங்கப்படும் மறைந்த மாணவன் சகாதேவன் நிலக்ஷன் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் குறித்த மாணவிக்கே வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு தோல்வி

(யாழ். நிருபர்)

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கும் இடையில் நேற்று (04) இடம்பெற்ற சந்திப்பில் எந்தவித ஆக்கபூர்வமான முடிவும் எட்டப்படவில்லை என முன்பள்ளி ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே முன்பள்ளி ஆசிரியர்கள் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 05 மாவட்டங்களிலும் உள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் கடந்த சில நாட்களாக தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் வடக்கு மாகாண ஆளுநர் முன்பள்ளி ஆசிரியர்களை சந்திப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், ஆளுநர் யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தினால் ஆளுநரின் செயலாளருடன் வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

எனினும், குறித்த சந்திப்பின்போது எந்தவிதமான ஆக்கபூர்வமான முடிவும் எட்டப்படவில்லை எனவும் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக போராட்டத்தினை முன்னெடுப்பதன் மூலமே தமக்குரிய தீர்வினைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலையில் எரிபொருள் தட்டுப்பாட்டால் மக்கள் அவதி

நீண்ட வரிசையில் வாகனங்கள் நின்றதால் போக்குவரத்து பாதிப்பு

(தலவாக்கலை செய்தியாளர்)

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, நானுஓயா மற்றும் தலவாக்கலை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் முதல் எரிபொருளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது.

தலவாக்கலை நகரில் இரண்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் இருக்கின்றபோதிலும், டீசல் பற்றாக்குறை காரணமாக வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றன.

ஒவ்வொரு வாகன சாரதிகளும் எரிபொருள் நிரப்புவதற்காக முண்டியடித்துக்கொண்டு வாகனங்களை செலுத்த முற்பட்டதன் காரணமாக, இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னாலும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

அதேவேளை, நுவரெலியா நகரில் இரு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இருக்கின்றபோதிலும் டீசல் தட்டுப்பாடு காரணமாக வாகன சாரதிகள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகினர்.

நுவரெலியா - வெளிமட வீதியில் தர்மபால

சந்திக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் கடந்த ஒரு வாரமாக எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. அதேவேளை, நேற்று தர்மபால சந்தியிலிருந்து வெளிமட வீதி வழியாகவும் நானுஓயா வீதி வழியே பிளக்பூல் சந்திவரை சுமார் 03 கிலோமீற்றர் தூரம் வரை வாகனங்கள் நீண்ட வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன.

இதனால் வாகன போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. நுவரெலியா, நானுஓயா, தலவாக்கலை உட்பட நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் டீசல் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சில வாகன சாரதிகள் தங்களின் வாகனங்களை நிறுத்திவிட்டு டீசலை பெற்று செல்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் முண்டியடித்துக் கொண்டிருந்தனர். டீசல் தட்டுப்பாடு காரணமாக வெளி மாவட்டங்களிலிருந்து நுவரெலியா நிறுத்த விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு மரக்கறிகள் வாங்க வருவோர் தற்போது வருவதில்லை.

அதேநேரம் தலவாக்கலை பகுதிகளிலிருந்து கொழும்பு நோக்கி மரக்கறி ஏற்றிச் செல்கின்ற வாகனங்களும் சில நாட்களாக செல்லவில்லை. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக 50வீதமான தனியார் பஸ்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. விடுமுறை நாட்களில் நுவரெலியாவுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளும் அவர்களுடைய வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்ப தடுமாறுகின்றனர்.

கடந்த ஒரு வார காலமாக நுவரெலியா, நானுஓயா மற்றும் தலவாக்கலை ஆகிய பகுதிகளில் டீசல் மற்றும் சமையல் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழில் இரத்தக்கறையுடன் வீதியோரம் சடலமொன்று மீட்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் இரத்தக்கறையுடன் வீதியோரம் சடலமொன்று நேற்று அதிகாலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை - பருத்தித்துறை வீதியில் பொன்னாலைக்கும் திருவடி நிலைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இனங்காணமுடியாத நிலையில் நபர் ஒருவரின் சடலம் காயங்களுடன் காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட சடலம் அருகே மோட்டார்சைக்கிள் ஒன்றும் காணப்படுவதனால் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த மரணம் விபத்தா அல்லது சதி வேலையா என இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பணப்பையை கண்டெடுத்து உரிமையாளரிடம் கையளித்த பஸ் ஊழியர்களின் முன்மாதிரி

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பெருந்தொகை பணத்துடன் பஸ்லில் கண்டெடுக்கப்பட்ட பணப்பையை ஆவணங்களுடன் உரிமையாளரை தேடி அவற்றை அவரிடம் கையளித்த சம்பவம் ஒன்று பலாங்கொடையில் இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடையில் இருந்து அலுத்கம வரையில் பயணிக்கும் இலங்கை போக்குவரத்து பஸ் சேவையின் பஸ் ஊழியர்கள் இப்பணப்பையை கடந்த 02ஆம் திகதி கண்டெடுத்துள்ளனர்.

அதனையடுத்து, இவ்விடயம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸாருக்கு அறிவித்து அதிலிருந்த ஒரு இலட்சத்து 05ஆயிரத்து 520 ரூபா பணத்துடன் அப்பையில் காணப்பட்ட பல முக்கிய ஆவணங்களையும் அதன் உரிமையாளரை பொலிஸ் அதிகாரிகள் ஊடாக தேடி கண்டுபிடித்து இவற்றை கையளித்துள்ளனர்.

பஸ் ஊழியர்களின் முன்மாதிரியான இச்செயற்பாடு பொலிஸ் அதிகாரிகளால் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் வீதி விபத்தில் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மூத்த விரிவுரையாளரான கனகசபை பாஸ்கரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்வியியற் கல்லூரியில்நேற்று முன் தினம்(03) வியாழக்கிழமை இரவு இடம்பெறவிருந்த நிகழ்வுக்காக கரவெட்டியிலுள்ள தனது வீட்டிலிருந்து

மோட்டார்சைக்கிளில் வந்து கொண்டிருந்தவேளை, கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி சந்தி பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

போதிய வெளிச்சமின்றிஉழவு இயந்திரப் பெட்டி நிறுத்திவைக்கப் பட்டிருந்தமையால் குறிக்தவிபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படு கிறது. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

தேசிய வாசிப்பு மாத போட்டிகள் -2021

தேசிய வாசிப்பு மாத போட்டிகள் - 2021இன் பரிசளிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை மாலை சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி விசாகரூபனும், கௌரவ விருந்தினராக வலி. தெற்கு பிரதேச சபைத் தவிசாளர் க. தர்சனும், சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் மற்றும் 'எங்கட புத்தகங்கள்' குலசிங்கம் வசீகரன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (யாழ். நிருபர்)

திகதி 03.03.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹாஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4695
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 13,732,710.00
ஆங்கில எழுத்து U | வெற்றி இலக்கங்கள் 5 4 2 3 5 4 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 51,959,605.20

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2990
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,103,180.00
ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கங்கள் 13 30 43 73 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,156,573.60

மேகா பவர் +23
சீட்டிழுப்பு இலக்கம் 1043
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,108,460.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 239,105,910.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O | கால் இலக்கம் 02 | வெற்றி இலக்கங்கள் 09 34 41 52

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 725
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,054,700.00
Q | 08 36 39 53 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,423,186.80
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம்: 0036
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,288,580.00
இலக்கினம் கடகம் | வெற்றி இலக்கங்கள் 07 31 33 45 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,651,205.00

தேசிய லொத்தரசி மன்றம் National Lotteries Board
இலக்கம் 12, ஹுலங்கல் மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

கொரோனா ஜனாஸாக்களை உறவினர்களிடம் கையளிக்க அனுமதித்து திருத்தப்பட்ட சுற்றறிக்கை

ஜனாதிபதி, பிரதமருக்கு ஐக்கிய காங்கிரஸ் பாராட்டு கடிதம்

(மாளிகைக்காடு நிருபர்)

கொவிட் சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என்றும் எந்தவொரு மையவாடிகள், மயானங்களிலும் அடக்கலாம் என அரசு திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிட்டுள்ளமைக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளிக்கட்சியான ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அரசுக்கும் நன்றி தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஐக்கிய காங்கிரஸ் தலைவர் முபாறக் அப்துல் மஜீத், ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொவிட் தொற்றினால் மரணிப்போரின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. மார்ச் 05 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அலேல குணவர்தனவினால் இது தொடர்பான திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய நிபந்தனைகளாக, கொவிட் தொற்றினால் மரணிப்போரின் சுகதாரர் ஊழியர்களால் உடல்கள் சீலிடப்பட்டு, சவப்பெட்டியில் வைக்கப்படும். (உறவினர்களால் சவப்பெட்டி வழங்கப்பட வேண்டும்) உடல் விடுவிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் அடக்கம் அல்லது தகனம் செய்யப்பட வேண்டும் என அறிவித்துள்ளது. இதன்மூலம் எமது கட்சியால் ஜனாதிபதி கோட்டாபயவிடம் விடுத்த கோரிக்கைக்கு தீர்வு கிடைத்துள்ளதன் மூலம் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொண்ட முதலாவது முஸ்லிம் கட்சி என்ற வகையில் மகிழ்ச்சியடைகிறோம்.

கொரோனாவினால் மரணிக்கும் ஜனாஸாக்களை அந்தந்த ஊர்களில் அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவரால் கடந்த 2021 நவம்பர் மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அநுராதபுரத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேரடியாக சந்தித்தபோது கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்கு ஜனாதிபதி சாதகமாக பதில் தந்திருந்தார். இதுபற்றி கட்சியின் உத்தியோக பூர்வ முகநூல் பக்கத்திலும் செய்தி வெளியிடப் பட்டிருந்தது. அதற்கமைய தற்போது சுகாதார அமைச்சு வெளியிட்ட அறிவித்தலின்படி இதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

ஐக்கிய காங்கிரஸின் கோரிக்கையை ஏற்று இத்தனை விரைவாக அந்தந்த ஊர்களில் அடக்கம் செய்ய அனுமதி தந்தமைக்காக ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் நன்றி தெரிவிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

மின் தடைக்கு எதிராக மட்டக்களப்பிலும் தீப்பந்தம், டோர்ச் லைட் ஏந்தி போராட்டம்!



மின்சாரத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மெழுகுவர்த்தி, தீப்பந்தம் மற்றும் டோர்ச் லைட் ஏந்திய போராட்டமொன்று நேற்று முன்தினம் (03) மட்டக்களப்பில் முன்னெடுக்கப்படுகிறது.

மட்டக்களப்பு கோட்டைக்கல்லாறு மற்றும் பெரிய கல்லாறுக்கு இடைப்பட்ட பாலத்தில் நேற்று முன்தினம் 8.30 மணியளவில் ஒன்றுகூடியவர்களால் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது நாட்டில் பரவலாக பல மணிநேர மின்சாரத்தடை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிலையில், மக்களின் பாதிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

குறிந்த போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்ட இரா.சாணக்கியன், நாடளாவிய ரீதியில் இந்த போராட்டத்தினை விஸ்தரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

மட்டக்களப்பில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு

(மட்டக்களப்பு நிருபர்)

அரசாங்கத்தின் சுபிட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக போதையற்ற நாடு - செளபாக்கியமான தேசம் எனும் மகுட வாசகத்துக்கு ஏற்ப, போதையற்ற தேகாரோக்கியமான, உள சுகாதாரமான நீங்களே சிறந்த மனிதன் எனும் தொனிப்பொருளுக்கு அமைய பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள தேசிய பயாசுகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைவாக, மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக மாவட்டத்திலும் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில், மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு செயலமர்வொன்று நேற்று (04) புனித மிக்கேல் கல்லூரியின் சிரேஷ்ட சாரணர் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்று.

சாரண ஆசிரியரும் மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் மாவட்ட இணைப்பாளருமான பீ.டினேஸ் தலைமையில் சிரேஷ்ட சாரணர் ஆர்.சாலோமின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த விழிப்புணர்வு செயலமர்வுக்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் கலந்துகொண்டிருந்ததுடன், போதைப்பொருள் பாவனையினை கட்டுப்படுத்துவதன் அவசியம் தொடர்பான கருத்துரையினையும் வழங்கியிருந்தார்.

இதன்போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையின் உள நல வைத்திய நிபுணர் அருள்ஜோதி கலந்துகொண்டு போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் பாதிப்புகள், அதனை தடுப்பது அல்லது குறைப்பது தொடர்பான கருத்துரைகளை முன்வைத்ததுடன், சமூகத்துக்கு இவ்விடயங்களை சாரண மாணவர்கள் ஊடாக எவ்வாறு கொண்டு சேர்ப்பது மட்டுமல்லாது கொண்டு சேர்க்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பிலும் இதன்போது விபரித்திருந்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவு சாரண மாணவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடன்சுமையோடும் விமர்சனங்களோடும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப போராடும் அரசாங்கம்

இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு

(கல்லடி நிருபர்)

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் போராடிக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் கடன்சுமை. மறுபுறம் அரசாங்கத்துக்கெதிரான விமர்சனங்கள். இவை யாவற்றையும் மிக அவதானமாக அரசாங்கம் எதிர்கொண்டு நாட்டை வளம் மிக்கதாக மாற்ற உறுதியாகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது என பின்னங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கிள வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் நான்காம் குறிச்சிப் பகுதியில் அமைக்கப்பட்ட மட்பாண்டக் கைத்தொழில் உற்பத்தி நிலையத்தை நேற்று முன்தினம் (03) திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

குறித்த இப்பிரதேசத்தில் அதிகளவில் மட்பாண்ட உற்பத்தியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்நிலையில், உங்களுக்கு வளரீதியாக பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் மீள்குடியேற்றஅமைச்சி னூடாகஎன்னால் 10இலட்சம் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப் பட்டது. அதன் அடுத்த கட்டமாக உங்களுக்காக இன்று 50 இலட்சம் ரூபா செலவில் இம்மட்பாண்ட கைத்தொழில் நிலையம் திறந்துவைக்கப்படுகின்றது.

சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டத் தின்கீழ் ஒவ்வொரு கிராமங்களிலுமுள்ள பௌதீக வளங்களைக் கண்டறிந்து, அதனூடாக உற்பத்திக் கிராமங்களை உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் இன்று நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அத்தோடு பனை உற்பத்தி சார்ந்த முன்மொழிவுகளை பிரதேச செயலாளர் ஊடாக அனுப்பியுள்ளோம்.

கிராமங்கள் தன்னிறைவு அடையும்போது நாடு தன்னிறைவடையும். இந்நிலையில் எமது மாவட்டமானது, பல்வேறு வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வளங்களை உரிய வகையில் பயன்படுத்துவதற்கான முறைமை இதுவரை உருவாக்கப்படவில்லை. அதுதான் இங்குள்ள பாரிய குறைபாடு. இதனை நாம் உரியவாறு பயன்படுத்துவதற்கான செயற்பாடுகளை உரிய வகையில் திட்டமிட்டு மேற்கொள்ளும்போது உரிய பயனை அடைந்துகொள்ள முடியும். இதனூடாகப் பிறிதொரு நாட்டில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் எழாது.

நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு, கொரோனா அச்சுறுத்தல், எண்ணெய் விலை அதிகரிப்பு என அடுத்தடுத்து பல்வேறு பிரச்சினைகள் எம்மை ஆட்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அவற்றை உரிய வகையில் எதிர்கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் போராடிக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் கடன்சுமை. மறுபுறம் அரசாங்கத்துக்கெதிரான விமர்சனங்கள். இவை யாவற்றையும் மிக அவதானமாக அரசாங்கம் எதிர்கொண்டு நாட்டை வளம் மிக்கதாக மாற்ற உறுதியாகப் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது என்றார்.

அக்கரைப்பற்று மாநகரசபை பொதுச்சபை அமர்வில் எல்லவல நீர்வீழ்ச்சியில் மரணித்தோருக்கு அனுதாபம்

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபையின் மாதாந்த பொதுச்சபை அமர்வு நேற்று முன்தினம் (03) அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸலி தலைமையில் மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது வெல்லவாய - எல்லவல நீர்வீழ்ச்சியில் நீராடச்சென்றவேளை, எதிர்பாராத விதமாக நீரில் மூழ்கி மரணித்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்களான அப்துல் ஹரீன் ஹயான், றிபாத் அஹறாத் ஆகியோருக்கும் மற்றும் அன்மையில் சுகயீனம் காரணமாக காலமான மாநகர சபை ஊழியர் முஹம்மத் றிஸ்வி ஆகியோருக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

சபை அமர்வில் மாநகர முதல்வர் கருத்து தெரிவிக்கையில், கொரோனா பெருந்தொற்று

காரணமாக சிதைந்துபோய் இருக்கும் நாட்டின் பொருளாதார கட்டமைப்பு விரைவில் சீரடையும் என்று நம்பிக்கொண்டிருந்தவேளை, உலகளாவிய ரீதியில் பேசப்படும் உக்ரைன் - ரஷ்யா யுத்தம் அதனோடு இணைந்த தொடர் பதட்டம், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல அனைத்து நாடுகளையும், மக்களையும் அச்சத்தில் ஆழ்த்தி இருப்பதை நாம் மறுக்கமுடியாது.

உலகத்தில் தற்போது நம்மை சூழ்ந்திருக்கும் அனைத்து நெருக்கடி நிலைகளில் இருந்தும் விரைவில் மீட்சி கிடைக்கவேண்டி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்வோம்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் மாநகர பொதுமக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் நாம் கூடிய கரிசனையோடு செயற்பட்டு வருகின்றோம். மாநகர சபையின் நாளாந்த செயற்பாடுகளை தடங்கல் இன்றி செயற்படுத்த தேவையான எரிபொருளை உள்ளூர் எரிபொருள் விற்பனையாளர்கள் விநியோகம் செய்து தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸலி தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மாநகர சபையின் 2021 பாதீட்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையுடைய மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில், அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பங்களுக்கு தேங்காய் துருவும் இயந்திரங்கள் மற்றும் மாவிடிக்கும் இயந்திரம் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று (04) மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸலி தலைமையில் மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை உறுப்பினர்களான

அஸ்மி அப்துல் ஷபூர், ஏ.சீ.எம்.நுஹ்மான் மற்றும் மாநகர சபை உத்தியோகத்தர்கள் உட்பட பயனாளிகள் கலந்துகொண்டனர்.

"படைப்பு கலை அடிப்படை சிகிச்சை" திறன் மேம்பாட்டு நிகழ்வு அம்பாறையில்

(நிந்தவூர் நிருபர்)

கொவிட்- 19 தொற்றுநோய் சூழ்நிலையில் தமது அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் மனச்சோர்வைக் குறைக்கும் நோக்கில், கொவிட் -19 ஆக்கபூர்வமான கலை அடிப்படை சிகிச்சை திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி மற்றும் நட்புறவு சந்திப்பு என்பன அம்பாறை மாநகர சபை ஓய்வு இல்ல வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர்களான நிலந்த டி சொய்சா, வி.ஜெகதீசன், உதவி மாவட்ட செயலாளர் விமல்ச சொவிர்தன, கணக்காளர் சந்தன குமார வனசிங்க, பிரதம பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாவட்ட மட்ட இலக்கியப் போட்டியில் காத்தான்குடி மாணவர்கள் முதல் 3 இடங்களைப் பெற்று சாதனை

(மட்டக்களப்பு நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மாவட்ட ரீதியாக நடத்தப்படுகின்ற மாவட்ட இலக்கியப் போட்டி தொடரில் முதல் மூன்று இடங்களைப் பெற்று காத்தான்குடி அல்ஹஸனாத் வித்தியாலய மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இப்போட்டித் தொடரில் கவிதை பாடல் போட்டி, ஆங்கில கையெழுத்துப் போட்டி, சிங்கள கையெழுத்துப் போட்டி ஆகியவற்றில் சிறுவர் பிரிவில் முதலாம் இடங்களை இவர்கள் பெற்றுள்ளனர்.

அல்ஹஸனாத் வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கும் எம்.ஏ.அஸீஹா என்ற

மாணவி கவிதைப் பாடல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரது நாட்டார் பாடல் இந்த பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக அரங்கேற்றப்பட்டமை சிறப்பம்சமாகும்.

அதேவேளை, ஆங்கில கையெழுத்துப் போட்டி சிங்கள கையெழுத்துப் போட்டி ஆகியவற்றில் ஆர்.எம்.இர்ஷா என்ற மாணவி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (03) இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனால் வழங்கிவைக்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

அடை மழையால் தேங்கி நிற்கும் வெள்ளநீரை வெளியேற்ற முடியாமல் மட்டு. மக்கள் அவதி

மரம் முறிந்து வீழ்ந்ததில் குடியிருப்பு சேதம்

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தினங்களாக பலத்த மழைபெய்து வருகின்ற நிலையில் பெரும்பாலான தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ளதனால் பொதுமக்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் மன்முனை தென் எருவில்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள தாழ்நிலப் பகுதிகளில் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதனால் பல வீடுகளுக்குள்ளும் நீர் புகுந்துள்ளது. இதனால் அங்குள்ள கர்ப்பினித் தாய்மார்கள், சிறுவர்கள், குழந்தைகள் என பலதரப்பட்ட மக்களும் மிகுந்த இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, அப்பிரதேசத்தில் அமைந்துள்ள பட்டிருப்பு, எருவில் பகுதியில் தேங்கிநிற்கும் வெள்ளநீரை வெளியேற்றுவதற்கு மன்முனை தென் எருவில் பிரதேச சபையினர் பெக்கோ இயந்திரத்துடன் குறித்த இடத்திற்கு நேற்று முன்தினம் (03) வருகை தந்திருந்தனர். எனினும், வெள்ளநீரை வெளியேற்றுவது தொடர்பில் பட்டிருப்பு மற்றும் எருவில் கிராம மக்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

அவ்விடத்திற்கு வருகைதந்த மன்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை செயலாளர் சா.அறிவழகன், கிராமசேவை உத்தியோகத்தர், களுவாஞ்சிக்குடி பொலிஸார் விஜயம் செய்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தனர். இறுதியில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபேயவிக்கிரம ஸ்தலத்திற்கு விஜயம்செய்து இரு கிராமத்தவர்களுடனும் கலந்துரையாடி மக்களுக்குப் பாதிப்பில்லாத வகையில் வெள்ளநீரை வெளியேற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கியதற்கிணங்க பிரதேச சபையினரால் வெள்ளநீரை வெளியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அப்பகுதியில் வீசிய பலத்த காற்றினால் பாரிய தென்னை மரமொன்று எருவில் கிராமத்தில் அமைந்துள்ள குடியிருப்பு வீடொன்றில் வீழ்ந்துள்ளதில் அவ்வீட்டிலிருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

சேதனப் பசளை பாவனை மூலமாக வாழைச்சேனையில் மஞ்சள் அறுவடை

(வாழைச்சேனை நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கமைய சேதனப் பசளை பாவனை மூலமாக உற்பத்திசெய்யப்பட்ட மஞ்சள் அறுவடை விழா நேற்று முன்தினம் (03) வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர் கே.அமலினி தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலக வளாகத்தில் கடந்த ஜூன் 2021ஆம் ஆண்டு அப்போது பிரதேச செயலாளராக கடமையாற்றிய கே.தனபாலசுந்தரத்தின் ஆலோசனையின்பேரில் இந்த மஞ்சள் உற்பத்தியானது மேற்கொள்ளப்பட்டது.

இந்த மஞ்சள் உற்பத்தி நடவடிக்கையில் பிரதேச செயலக திட்டமிடல் உத்தியோகத்தர் ஆர்.கங்காதரன் மற்றும் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்நிகழ்வில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் ஆகியோர்கள் இவ்வறுவடை விழாவில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட இலக்கிய போட்டித்தொடரில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

(மட்டக்களப்பு நிருபர்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட இலக்கிய விழா போட்டித்தொடரில் வெற்றியீட்டிய மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உதவி மாவட்ட செயலாளர் அ.நவேல்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் கலந்து சிறப்பித்ததுடன், வெற்றியீட்டிய மாணவர்களை பாராட்டி பரிசில்கள் வழங்கி கௌரவித்திருந்தார்.

மேலும், இந்நிகழ்விற்கு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஜெய்னுலாப்தீன் உள்ளிட்ட மாவட்ட செயலக கலாசாரப் பிரிவின் உத்தியோகத்தர்கள், 14 பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் கலாசார திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய வெற்றியாளர்களும் அவர்களது பெற்றோர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

கலாசாரத் திணைக்களமும் மாவட்ட செயலகமும் இணைந்து வருடாந்தம் மாவட்ட மட்டத்தில் மாவட்ட இலக்கியப் போட்டிகளை நடத்திவந்த நிலையில், கடந்த வருடங்களில் போட்டிகள் நடத்தப்பட்டபோதிலும் கொவிட்-19 சூழ்நிலையை கருத்திற்கொண்டு பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறாத நிலையில் கடந்த இரண்டு வருடங்களிலும் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வே மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

பாவர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த மட்ட போட்டிகளில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலப் போட்டிகளிலும் கவி பாடல், கட்டுரை, பார்த்து எழுதல், பாடல் நயத்தல், சிறுகதை போன்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் மற்றும் வெற்றியாளர்கள் இதன்போது அதிதிகளினால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு சர்வமதத் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் ஒழுங்குசெய்யப்பட்ட "ஒழுக்க விழுமியங்களை பாதுகாப்பதில் சமயங்களின் பங்களிப்பு" எனும் தொனிப்பொருளிலான கருத்துரைகளும் மாணவர்களுக்காக இதன்போது வழங்கப்பட்டது. இதனை வழங்குவதற்காக மாவட்ட செயலக ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ உ.ஜெகதீஸ்வர குருக்கள், நாவற்குடா தெஹிவ்த திருச்சபையின் போதகர் ரவி முருகுப்பிள்ளை மற்றும் மட்டக்களப்பு ஜாமிஉல் ஸலாம் ஜும்ஆ பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி ஆ.நியாஸ் ஆகிய மதகுருமார் கலந்துகொண்டு கருத்துகளை பகிர்ந்திருந்ததுடன், இவர்களுக்கும் அதிதிகளினால் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவம் வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இடமாற்றம் பெற்றுச்செல்லும் சமூர்த்தி முகாமையாளருக்கு பிரியாவிடை

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் 06 வருடங்கள் பணியாற்றி அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும் சமூர்த்தி தலைமைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாவுக்கான பிரியாவிடை வைபவம் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.ஜெலில் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது.

இவ்வைபவத்தில் உதவி பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முஷாபிர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, ஞாபகப்பரிசினை வழங்கிவைத்து கௌரவித்ததுடன், சமூர்த்தி முகாமையாளர்களான எம்.ஏ.இமாமுத்தீன், எஸ்.ரீ.மகூர், எஸ்.எம்.அலீஸ், நபீஸா மன்சூர், எம்.நஜீம் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழீல், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஜெபார், பிரதம முகாமைத்து சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சி.முஸம்மட் றக்ஸ், மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இவர் கடந்த 26 வருடங்கள் சமூர்த்தி முகாமையாளராக சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடை மழையால் கடல் கொந்தளிப்பு; கிழக்கில் மீனவர்கள் பாதிப்பு

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக தொடர்ச்சியாக மழை பெய்வதால் மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களில் கடற்கொந்தளிப்பு காரணமாக கரையலை மற்றும் ஆழ்கடல் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்க செல்வாத காரணத்தினால் கடல்மீனுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதுடன், கிடைக்கும் கடல்மீன்கள் கூடுதலான விலைக்கும் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேவேளை ஆறு, குளம் மற்றும் வாவிகளில் பிடிக்கப்படும் ஆற்று மீனுக்கு கடும் கிராக்கி நிலவுவதுடன் விரால், செப்பலி, கோல்டன், கெளுத்தி, கங்கான், பனையான், இறால் மற்றும் மணலை போன்ற மீன்வகைகள் முன்னரை விட இரண்டு மடங்கு கூடிய விலைக்கு விற்கப்படுகின்றன.

கடல்மீன் தட்டுப்பாட்டால் ஆற்றுமீன் சாப்பிடாதவர்கள் கூட ஆற்று மீன்களை வாங்கிச் செல்கின்றனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் மாட்டிறைச்சி 1.400 ரூபாய்க்கும், கோழியிறைச்சி 800 முதல் 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

பல்கலை கலைஞர் ஆரையூர் அருளுக்கு கலையருவி பட்டம் வழங்கி கௌரவிப்பு!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு "அ" கலையகம் மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த பல்கலை கலைஞர் மூத்ததம்பி அருளம்பலத்துக்கு (ஆரையூர் அருள்) கலையருவிப் பட்டம் வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளது.

"மட்டக்களப்பு மகிமை வடமோடிக்கூத்து பாகம்-1" அரங்கேற்றம் அண்மையில் கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய முன்றலில் இடம்பெற்றபோதே அவருக்கு இக்கௌரவம் வழங்கப்பட்டது. அத்தோடு ஏட்டண்ணாவியார் ம.கேதீஸ்வரன், மத்தள அண்ணாவியார் தே.சுவேந்திரன் மற்றும் கூத்துக்கலைஞர் நா.பாஸ்கரன் ஆகியோரும் இதன்போது பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இதுவரை பல்வேறு ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ள மூத்ததம்பி அருளம்பலம் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய ரீதியாகப் பல்வேறு விருதுகளையும், பட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிண்ணியாவில் பெற்றோரை இழந்த 100 மாணவர்களுக்கு நிதி உதவி

(சீனாக்குடா நிருபர்)

கிண்ணியா பிரதேசத்தில் தாய், தந்தையை இழந்து, கல்வியைத் தொடர்வதில் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் 100 மாணவர்களுக்கு மாதாந்த நிதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (03) கிண்ணியா அல்-இக்ரா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

கிண்ணியாவில் இயங்கிவரும் Global Ehsan Relief தொண்டு நிறுவனத்தினால் மாதாந்தம் இந்த உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் தற்போது மூன்றாவது கட்டமாக நடைபெற்று வருகின்றது.

தொண்டு நிறுவனத்தின் இயங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் தௌபீக் முஹம்மது ஜரூக் இந்த உதவித்தொகை வழங்கினார்.

உலக செய்திகள்

உக்ரைனின் அணுமின் நிலையம் மீது ரஷ்யா தாக்குதல்

தீப்பிடித்து எரியும் சபோரிசியா வெடித்தால் செர்னோபிலை விட 10 மடங்கு பேரழிவு

ஐரோப்பியாவின் மிகப் பெரிய அணு உலையான உக்ரைனின் சபோரிசியா அணு மின் நிலையத்தின் (Zaporizhzhia plant) அனைத்து பக்கங்களிலிருந்தும் ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியதால் அணு மின் நிலையம் தீப்பிடித்து எரிகிறது.

அணு உலை வெடித்தால் செர்னோபிலை விட பத்து மடங்கு சேதங்களை விளைவிக்கும் என உக்ரைன் அமைச்சர் அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது கடந்த 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா இன்றுடன் 10ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்திவருகிறது. உக்ரைனின் அனைத்து பக்கங்களிலிருந்தும் ரஷ்யப் படைகள் மும்முனைத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஏவுகணைத் தாக்குதல்; 33 பேர் பலி

உக்ரைன் - ரஷ்ய மோதலின் 9ஆவது நாளான நேற்று செர்னியங் பகுதியில் ரஷ்யப் படைகள் நடத்திய ஏவுகணை தாக்குதலில் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்ததில் இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 33 சடலங்களை மீட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையின் 9ஆவது நாளான நேற்று, ரஷ்யா வான் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின.

'புளிந் நகரம்' என அழைக்கப்படும் செர்னியங்வில் ரஷ்யப் படைகள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து உருக்குலைந்தன. இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்த 33 பேரின் உடலை மீட்டதாக அவசர சேவைகள் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

துறைமுக நகரங்களை கைப்பற்றுகிறது ரஷ்யா: தலைநகர் கீவ் - கார்கீவ்வை கைப்பற்ற கடும் மோதல்

துறைமுக நகரங்கள் கைப்பற்றும் ரஷ்யா

உக்ரைனின் முக்கிய நகரங்களை கைப்பற்றும் திட்டத்தோடு ரஷ்ய இராணுவம் ஏவுகணைகள், வெடிகுண்டுகளை வீசி நடத்திவரும் கடுமையான தாக்குதலில் கெர்சான் நகரை கைப்பற்றியுள்ளது. இரண்டாவது பெரிய நகரான கார்கிவ் நகரை பிடிக்க ரஷ்யப் படைகள் உக்ரைன் படைகளுடன் கடுமையாக மோதி வருகின்றன. கார்கிவ் நகரில் இயல்புநிலை முற்றிலுமாக முடங்கியுள்ளது.

வீதிகளில் ரஷ்ய - உக்ரைன் படைகள் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும் சூழல் உள்ளது.

தலைநகர் கீவ் மீதும் ரஷ்யா தொடர்ந்து குண்டு மழை பொழிந்து வருகிறது. காலையிலிருந்தே கீவ் நகரில் குண்டுகள் வெடித்துச் சிதறும் சத்தம் விண்ணைப் பிளக்கிறது.

விமானங்கள் மூலம் தொடர்ந்து குண்டுகளையும், ஏவுகணைகளையும் வீசி தாக்கி வருவதால் தலைநகர் கீவ்வை சுற்றியுள்ள பல கிராமங்கள் மற்றும் நகரங்கள் சீர்குலைந்தன. அடுக்குமாடிக் கட்டடங்கள் தீப்பற்றி எரிவது, வீதிகளில் வாகனங்கள் சிதறிக் கிடப்பது கட்டட குவியல்கள் என கீவ் நகரம் உருக்குலைந்து காட்சியளிக்கிறது.

ரஷ்யாவின் உக்கிரத் தாக்குதலில் திரும்பும் திசையெல்லாம் நெருப்பு சூழும்புகளும் புகையுமாக காணப்படுகின்றன. முக்கிய நகரங்கள் மீது குண்டுகள் வீழும் சத்தம் கேட்டவண்ணம் உள்ளன.

சில நாட்களுக்கு முன் கீவ் நகரிலிருந்து 65 கிலோமீற்றர் தொலைவிலிருந்த ரஷ்யப் படைகள் தற்போது கீவ் நகரிலிருந்து 25 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தரைவழி, வான் மார்க்கமாக தாக்குதல் நடத்திய ரஷ்யப் படைகள் கடற்படையின் உதவியுடனும் தாக்குதலை தொடுத்து வருகின்றன.

இதில் கருங்கடலிலுள்ள துறைமுக நகரமொன்று ரஷ்யாவிடம் வீழ்ந்துள்ளதாக உக்ரைன் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்னொரு துறைமுக நகரான மரியுபோல் நகரை பிடிப்பதற்காக ரஷ்யப் படைகள் தீவிர தாக்குதலை தொடங்கியுள்ளன.

இந்நிலையில், பெலாரஸில் நடந்த உக்ரைன் - ரஷ்யா இடையிலான பேச்சுவார்த்தையில் எந்தவித உடன்பாடும் ஏற்படாததையடுத்து தீவிர தாக்குதலில் ரஷ்யப் படைகள் ஈடுபட்டுள்ளன. ஏற்கனவே கெர்சன், சொர்னோபில் உள்ளிட்ட பகுதிகளை கைப்பற்றியதாக ரஷ்யா அறிவித்தது.

தலைநகர் கீவ்வின் அண்மை நகரமான சபோரிசியா அணு மின் நிலையத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியாவின் மிகப்பெரிய அணு மின் நிலையமான சபோரிசியா அணு உலை தீப்பிடித்து எரிகிறது. ஒருவேளை அணு உலை வெடித்தால், 1986இல் செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட பேரழிவைவிட 10 மடங்கு அதிக சேதத்தை விளைவிக்கும் என உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அணு மின் நிலையத்தில் பற்றிய தீ உரிய நேரத்தில் அணைத்து பாதுகாப்பை உறுதிசெய்துள்ளதாக உக்ரைன் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சபோரிசியா அணு மின் நிலையத்தை தொடர்ந்து கண்காணித்து வருவதாக தெரிவித்துள்ள சர்வதேச அணுசக்தி கழகம் கதிர்வீச்சின் அளவில் மாற்றம் ஏதும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

மேலும் ஒடேஷா, பிலா செர்கவா, வாலின் ஒபிலஸ்ட் உள்ளிட்ட பகுதிகளில் ரஷ்ய விமானங்கள் தொடர் தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து வான்வெளித் தாக்குதல் எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே சபோரிசியா அணு உலையின் நிலை குறித்து உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கியிடம், அமெரிக்க ஜனாதிபதி பைடன் கேட்டறிந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு புட்டினுக்கு - ஸெலென்ஸ்கி அழைப்பு

உக்ரைன் நகரின் முக்கிய நகரங்கமீது ரஷ்யப் படைகள் முழுவீச்சில் தாக்குதலை தொடுத்துள்ள நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புட்டினை நேரடியாக பேச்சுவார்த்தைக்கு வருமாறு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

பெலாரசில் நேற்றுமுன்தினம் இரவு ரஷ்யா - உக்ரைன் இடையே இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சு நடைபெற்றது. இதில் போரை நிறுத்துவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என்ற போதும் சில விடயங்களில் இருதரப்பினரிடையிலும் ஒருமித்த கருத்து உருவானது.

ரஷ்யா - உக்ரைன் அதிகாரிகள் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மனிதநேய உதவிகளைத் தடுக்கக்கூடாது என்றும் வெளிநாட்டவரை பாதுகாப்பாக வெளியேற்ற ஒத்துழைப்பது என்றும் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து புட்டினுடன் நேரடியாகப் பேச்சு நடத்த உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார். துப்பாக்கித் தோட்டாக்களை விடவும் சொற்கள் முக்கியமானவை என்று தெரிவித்த ஸெலென்ஸ்கி, "புட்டினுடன் பேச்சு நடத்தும்போது தான் அவரை கூத்துவிடப்போவதில்லை" என்று தெரிவித்தார்.

இதனிடையே Chernihiv மாகாணத்திலுள்ள இரண்டு பாடசாலைகள் மீது ரஷ்ய பீரங்கிகள் குண்டு மழை பொழிந்ததில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த ஒருவார காலத்தில் பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் அகதிகளாக வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சம் புகுந்திருப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. எதிர்வரும் நாட்களில் சுமார் 40 இலட்சம் பேர் அகதிகளாகும் சூழ்நிலை உருவாகலாம் என்றும் ஐ.நா. அச்சம் தெரிவித்துள்ளது.

ரஷ்யர்களும், உக்ரைனியர்களும் வெவ்வேறு கிடையாது

உக்ரைனில் ரஷ்ய இராணுவம் திட்டமிட்டபடி முன்னேறிச் செல்வதாக தெரிவித்த ஜனாதிபதி புட்டின், மனிதாபிமான உதவிகளை தடுக்கக்கூடாது. பொதுமக்களை வெளியேற்ற உதவுவது குறித்த உக்ரைனின் பேச்சுக்கு உடன்படுவதாக தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி புட்டின், போர் குறித்த உலகளாவிய எதிர்ப்புகளை கவனிக்க நேரமில்லை என்றும், 2ஆவது வாரத்தில் போர் முடிவுக்கு வரும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

"நடப்பது நியோ நாசிசத்தை வேரறுக்கும் போர். ரஷ்யர்களும், உக்ரைனியர்களும் வெவ்வேறு கிடையாது எனும் நம்பிக்கை ஒருபோதும் கைவிடப் போவதில்லை" என்றார். போரில் இறந்த ரஷ்ய வீரர்களின் குடும்பங்களுக்கு பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து வகையிலான உதவிகளும் வழங்கப்படும் என்றார்.

உக்ரைனில் எங்களது இலக்குகள் எட்டப்படும் - புட்டின்

"உக்ரைன் மீதான தாக்குதலில் தங்களது இலக்குகள் எட்டப்படும்" என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோனிடம் தொலைபேசி மூலம் உரையாடியபோது புட்டின் இவ்வாறு தெரிவித்ததாக ரஷ்ய ஜனாதிபதியின் கிரெம்ளின் மாளிகை தெரிவித்துள்ளது.

புட்டின் மீது போர்க் குற்ற விசாரணை

உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கைகளின்போது நடைபெறுவதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதி புட்டின் மற்றும் முக்கிய அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரணை தொடங்கியுள்ளது.

இதுகுறித்து நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் செயற்பட்டுவரும் அந்த நீதிமன்றத்தின் விசாரணை அதிகாரி கரீம் கான் தெரிவிக்கையில்,

உக்ரைனில் ரஷ்யா மேற்கொண்டுவரும் மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை தொடங்கப்படுகிறது. போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுத் தருவதற்காக இந்த விசாரணை தொடங்கப்படுகிறது என்றார் அவர்.

'ருமேனியாவில் 3 நாட்கள் வரை வரிசையில் நிற்கணும்'

உக்ரைனிலிருந்து நாடு திரும்ப இந்திய மாணவர்கள் சந்திக்கும் இன்னல்கள்

உக்ரைனில் சிக்கிய இந்திய மாணவர்கள், ஐரோப்பிய எல்லை நாடான ருமேனியாவில் மூன்று நாட்கள் வரை வரிசையில் நிற்கவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, நேற்று நண்பகல் வரை டெல்லிக்கு வந்த ஆறு மீட்பு விமானங்களில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் சுமார் 150 பேர் வந்தடைந்துள்ளனர்.

ரஷ்யப் போரினால் உக்ரைனில் சிக்கியவர்கள் தங்கள் நாடுகளுக்குத் திரும்ப பலவேறு இன்னல்களை சந்தித்துள்ளனர். இவர்கள் மீட்பு விமானங்களை பிடிக்க, மேற்குப் பதியிலுள்ள ஐரோப்பிய நாடுகளான ஹங்கேரி, போலாந்து மற்றும் ருமேனியாவிற்கு பஸ்களில் செல்ல வேண்டியுள்ளது. இதில், ருமேனியா வழியாக இந்தியா திரும்பியவர்கள் பலவேறு இன்னல்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. இது, அவர்களுக்கு எல்லைகளில் இந்திய தூதரக அதிகாரிகளை சந்திப்பது வரை தொடரும் நிலை உள்ளது.

ருமேனியாவில் மீட்புப் பணிக்காக அமைக்கப்பட்டுள்ள கூடாரங்கள் போதுமானதாக இல்லை எனக் கருதப்படுகிறது. குறிப்பாக, அவற்றில் மாணவிகளுக்கு கழிவறை உள்ளிட்ட வெளியில் செல்ல முடியாத பல்வேறு சிக்கல்கள் நேர்ந்துள்ளன. பஸ் மற்றும் மீட்பு விமானப் பதியகளுக்காக மூன்று நாட்கள் வரை கூட வரிசையில் காத்திருக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. இந்த வரிசையில் அங்கு பெய்யும் கடும் குளிர் மற்றும் பனிப்பொழிவுகளில் இருக்கவேண்டியதாயிற்று.

இது குறித்து விளிசியா தேசிய அரச மருத்துவப் பல்கலைக்கழகத்தில் பயிலும் முதலாம் ஆண்டு மாணவியான ஜனனி கூறும்போது, போர் துவங்கிய பின் நாளொன்றுக்கு 10 முதல் 12 தடவைகள் பாதாள அறைகளுக்கு சென்று திரும்பவேண்டியதாயிற்று. முதன்முறையாக நாம் மார்ச் 1இல் ரயிலில் செல்லக் கிளம்பியபோது எங்கள் பல்கலைக்கழகத்தின் டீன் கையெப்பம் வாங்கவில்லை. இதனால், ரயிலில் ஏற அனுமதியின்றி மீண்டும் விடுதிகளுக்கு திரும்பினோம். பிறகு பல்களில் எங்கள் செலவில் கிளம்பி ருமேனியா எல்லை அடைந்தோம். இதிலும் போர்க்குவாத்து நெரிசலால் பல கி.மீ. தொலைவிற்கு நடக்க வேண்டி இருந்தது.

உக்ரைன் எல்லையிலிருந்து ருமேனியாவில் நுழைய நாம் சுமார் 24 மணிநேரம் காத்திருந்தோம். எங்களைபோல் வேறு பலர் சுமார் மூன்று தினங்கள்வரை வரிசைகளில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவும் திறந்தவெளியில் பனியில் இருப்பதால் பலருக்கும் மூச்சுவாங்குதல், காய்ச்சல் உள்ளிட்ட பிரச்சினைகளும் இருந்தன. எங்களை அழைத்துச் செல்ல இந்திய அதிகாரிகளால் உக்ரைன் எல்லையில் நுழைய அனுமதியில்லை. உக்ரைன் எல்லையிலிருந்து வெளியேறி ருமேனியாவில் நுழைந்த பிறகே இந்திய அரசின் உதவி கிடைக்கிறது. மத்திய அரசால் ஏற்பாடுகள் செய்யும் தங்குமிடங்களிலும் கூடுதல் வசதிகள் அவசியம். கைபேசிகளில் தீர்ந்துபோன சார்ஜல் ஏவரிடமும் பேச முடியவில்லை. எல்லையில் எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை முழுமையாகவும் கும்பத்தாரிடம் கூறமுடியவில்லை. இதனால், அவர்கள் கவலை கூடிவிடும் என்பதால் அவற்றை எங்களுடன் இருந்த சகமாணவிகளுடன் பேசி ஒருவொருக்கு ஒருவர் ஆறுதலாக இருந்தோம் எனத் தெரிவித்தார்.

இதனிடையே, டெல்லி மட்டுமன்றி நேற்று முன்பைக்கும் உக்ரைனிலிருந்து அதிகமாக மீட்பு விமானங்கள் வந்திறங்கின. இவற்றில் வந்த சுமார் 900 இந்தியர்களில் தமிழர்கள் 150 பேர் இடம்பெற்றிருந்தனர்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் மதியத்திற்கு பின் டெல்லி வந்த இரண்டு விமானங்களில் சுமார் 80 தமிழர்கள் வந்திறங்கினர். இவர்கள் அனைவரும் நள்ளிரவு வரையிலான விமானங்களில் தமிழகத்தின் பலவேறு பகுதிகளுக்கு கிளம்பிச் சென்றனர்.

இதுபோல், டெல்லிக்கு வரும் மற்ற மாநில மாணவர்களில் பலரும் அங்குள்ள மாநில அரசு இல்லங்களிலும் தங்கிச் செல்கின்றனர். ஆனால், இந்த வகையில் வரும் தமிழர்களில் பலரும் டெல்லியில் தங்க விரும்பாமல் உடனடியாக தங்கள் வீடுகளுக்கு சென்றடைய விரும்புகின்றனர். இதனால், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி டெல்லியின் தமிழ்நாடு அரச இல்ல அதிகாரிகள் அனைவருக்கும் டெல்லி விமான நிலையத்தில் இருந்தே நேரடியாக அனுப்பி வைக்கின்றனர். இதற்காக அங்கேயே ஒரு சிறப்புக் குழுவை அமர்த்தி, தமிழகத்தின் விமான நிலையங்களுக்கான டிக்கெட்டுகள் பதிவு செய்யப்படுகின்றன.

உக்ரைனிலிருந்து நாடு திரும்பியவர்களில், நேற்று நண்பகல் வரையில் தமிழகம் வந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 430 என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7